# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 கார்த்திகை 6 திங்கட்கிழமை (22-11-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:309


# மடு ஆலயப்பகுதியில் தஞ்சமடைந்த மக்களில் 38 பேர் பலி! 65 பேர் காயம்!

## சனி இரவு நிகழ்ந்த கோரச் சம்பவம்

மன்னார், நவம்பர் 22

மடுத் தேவாலயப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற ஷெல் தாக்குதல் சம்பவம் ஒன்றில் 38 அப்பாவிப் பொது மக்கள் உயிரிழந்தனர். 65 பொதுமக்கள் காயமடைந்தனர்.

இரவு 10-00 மணியளவில் இந்தக் கோரச் சம்பவம் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த சுமார் மூவாயிரத்து 600 பொது மக்கள் மடுமாதா ஆலயத்தில் தஞ்சம் அடைந்திருந்த சமயம் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தின் போது 31 பேர் அதே இடத்தில் கொல்லப்பட்டனர் என்றும் ஏழு பேர் வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட பின்னர் மரணம் அடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

காயம் அடைந்த 65 பேரில் 15 ஆண்களும் 16 பெண்களும் 14 ஆண் குழந்தைகளும் 11 பெண் குழந்தைகளும் வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காயம் அடைந்த இரு குழந்தைகள் ஆபத்தான நிலையில் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆலயத்தில் தஞ்சம் அடைந்த மக்கள் ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் நித்திரையாக இருந்த சமயம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் காரணமாக மடுப் பிரதேசம் சோக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் ஆஸ்பத்திரியில் 31 சடலங்கள் ஒப்படைப்பு!

மன்னார், நவ. 22

மடுத் தேவாலயப் பகுதியில் உயிரிழந்த 31 பேரின் சடலங்களும் மரண விசாரணைக்காக மன்னார் ஆஸ்பத்திரிக்கு நேற்று மாலை எடுத்துவரப்பட்டன.

மன்னார் மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் மாவட்ட வைத்திய அதிகாரி, மன்னார் ஆயர் அதிவண ராயப்பு யோசெப் ஆகியோர் நேற்றுக்காலை மடுவுக்குச் சென்றனர்.

நீதிவானின் உத்தரவுப்படி அந்தச் சடலங்கள் மன்னார் ஆயரினால் பொறுப்பேற்கப்பட்டு மன்னார் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டன.

பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணையை அடுத்து சடலங்களை மன்னார் ஆயர் பொறுப்பேற்று மடுவுக்கு எடுத்துச் சென்று உறவினர்களிடம் இன்று கையளிப்பார். (இ-3)



அப்ப தமிழர் அவல நிலை தொடர் கதை தானா...?

## மடு தேவாலயம் சேதம்

மன்னார், நவ. 22

மடுத்தேவாலயத்தில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல் சம்பவத்தில் ஆலயத்துக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக ஆலய பங்குத் தந்தை தெரிவித்துள்ளார்.

ஆலயத்தில் தங்கியுள்ள அகதிகள் இருந்த மண்டபப் பகுதியே சேதத்துக்கு உள்ளானது என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## புனிதத் தன்மையை பாதுகாக்க மன்னார் ஆயர் கோரிக்கை

மன்னார், நவ. 22

மன்னார் மடுத் தேவாலயத்தின் புனிதத் தன்மையைப் பாதுகாக்க அரசுப் படையினரும் விடுதலைப் புலிகளும் அந்தப் பிரதேசத்தில் இருந்து வெளியேற வேண்டுமென்று மன்னார் ஆயர் அதிவண. ராயப்பு யோசெப் இரு தரப்பினரிடமும் விண்ணப்பித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மடுக் கோயில் தாக்குதல் சம்பவம் வேதனைதரும் கொடூரமான செயல்!

### யாழ். ஆயர் மற்றும் அமைப்புக்கள் கண்டித்து அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 22

மடுமாதா ஆலயப் பகுதியில் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து யாழ். ஆயர் மற்றும் யாழ். அமலமரித் தியாகிகள் சார்பாகவும் ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பாகவும் கண்டன அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

யாழ். ஆயர்

யாழ். ஆயர் விடுத்த கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மடுப் பதியானது கத்தோலிக்கர்கள் மட்டுமல்லாது சகல மதத்தினரும் புனிதமாகப் பேணும் ஓர் இடமாகும்.

இப் பதியை இராணுவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவது பக்தர்கள் எல்லோரையும் புண்படுத்தும் செயலாகும்.

போரில் ஈடுபடும் இரு தரப்பினரும் மடுப்பதியை யுத்த சூனியப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தவேண்டும்.

மடுப்பதியில் தஞ்சம்புகுந்து ஆலயத்திலிருந்த மக்கள் 38 பேர் உயிரிழந்ததும் 64 க்கும் அதிகமானவர் ஷெல்வீச்சினாலும் காயமடைந்துமுள்ளனர்.

இச்செயல் மிகவும் வேதனை தரும் கொடூரமான செயலா

[10 ஆம் பக்கம் பார்க்க]

## மடுச் சம்பவத்துக்கு சந்திரிகா பொறுப்பு ஏற்க வேண்டும்

### ஜயலத் எம். பி. கோருகிறார்

கொழும்பு, நவ. 22

மடுத் திருப்பதியில் 38 பொது மக்கள் கொல்லப்பட்டும், 65 பேர் காயமடைந்தும் இடம்பெற்ற சம்பவத்துக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொறுப்பேற்க வேண்டும் என்று ஐ. தே. க. நியமன நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ''மடுத்திருப்பதி சமாதான வலயமாக மதிக்கப்பட வேண்டிய புனித இடம். அந்த இடத்தில் மனித இரத்தம் ஓடியுள்ளது. இந்தச் செயல் கண்டிக்கப்பட வேண்டிய தொன்றாகும். மடுத்தேவாலயப் பகுதியை சமாதானவலயப் பகுதியாக அரச படைகளும், விடுதலைப் புலிகளும் மதிக்க வேண்டும் - என்றார். (இ-3)

## வவுனியா ஆஸ்பத்திரிக்கு மக்கள் படையெடுப்பு

வவுனியா, நவ 22

மடுத் தேவாலயப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் காயமடைந்து வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பொதுமக்களைப் பார்வையிடவென பெரும் எண்ணிக்கையானோர் நேற்று வவுனியா ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்தனர் என வவுனியாச் செய்திகள் தெரிவித்தன.

காயமடைந்தவர்களின்விவரங்களைத் திரட்டிய ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் அந்த விவரங்களை விளம்பரப் பலகையில் விளம்பரப்படுத்தியதனால் பெரும் ஏக்கத்துடன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோரின்பாதுகாவலர் டிசெ. 5 முதல் உண்ணாவிரதம்

### சுழற்சி முறையில் ஈடுபடுவர்

குடாநாட்டில் கைதாகிக் காணாமற் போனோரின் பாதுகாவலர்கள் எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் சுழற்சி முறையில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

யாழ். மத்திய கல்லூரியில் நேற்று நடந்த கூட்டம் ஒன்றில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டு மக்களுடன் செய்மதி மூலம் ஜனாதிபதி கலந்துரையாடிய போது, காணாமற்போனோர் தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும்—

அவரிடம் இருந்து திருப்திகரமான பதில் கிடைக்காததால் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்க வேண்டும் என்றும் — கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும் வலியுறுத்தினார்கள்.

மனித முன்னேற்ற நடுநிலையப் பொறுப்பாளர் வணபிதா ஆர். ஜெயக்குமார், நல்லெண்ணத்துக்கும் சமாதானத்துக்குமான அமைப்பைச் சேர்ந்த சு. பரமநாதன் உட்பட பலர் இந்தக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர். (இ-3-9)

## பயணிகள் விமான சேவை நேற்று மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 21

பலாலிக்கும் கட்டுநாயக்காவுக்கும் இடையிலான பயணிகள் விமான சேவை மீண்டும் நேற்று ஆரம்பமானது.

கடந்த சில நாள்களாகப் பாதிக்கப்பட்டிருந்த இந்தச் சேவை நேற்று மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது என்றும்—

கடந்த 16, 17, 18 ஆம் திகதிகளில் பயணம் செய்ய டிக்கெட் பெற்றவர்கள் நேற்று அனுப்பப்பட்டனர் என்றும்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இசைநாடக போட்டி

யாழ்ப்பாணம், நவ. 22

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் நடத்தும் இசை நாடகப் போட்டி விழாவின் நிகழ்வு ஐந்து இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கந்தர் மடம் சைவப்பிரகாச வித்தியா சாலையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு இளைப்பாறிய நீதிபதி மு. திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகவும் இளைப்பாறிய அதிபர் எஸ். தார்சீசியஸ் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

இந்த இசை நாடகப் போட்டியில்சி. மகாலிங்கம் குழுவினரின் 'வீரத்தாய்,' எஸ். வீ. கே. நல்லையா குழுவினரின் 'அரிச்சந்திர மயான காண்டம்,' நியூட்டன் கலா மன்றத்தின் 'வள்ளி திருமாணம்', நா. மதியழகன் குழுவினரின் 'அரிச்சந்திர மயான காண்டம்' என்பன இடம் பெற உள்ளன. (க)

## பொருள்கள் இறக்கும்பணி நேற்று மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ 22

பருத்தித்துறை துறைமுகத்தில் கடந்த 3 நாள்கள் இடைவெளியின் பின்னர் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் பணி மீண்டும் நேற்று ஆரம்பமாகியது.

கடல் கொந்தளிப்பு காரணமாகப் பொருள்களை இறக்க முடியாத நிலையில் துறை முகத்தில் தரித்து நின்ற 'வாதுவ'. 'சஜிந்த' ஆகிய கப்பல்களில் இருந்தும் —

நேற்றுத் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்த 'இந்துருவலி' கப்பலில் இருந்தும் — பொருள்களை இறக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

'இந்துருவலி' கப்பலில் கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனம், அரச வர்த்தக கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கான சிமெந்து உட்பட ஏனைய கட்டடப் பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதேவேளை —

வடபகுதி உற்பத்திப் பொருள்களை ஏற்றிச் செல்வதற்காகத் தரித்து நின்ற 'ஹெந்தல' கப்பல் 200மெற்றிக் தொன் வெங்காயத்தை ஏற்றிக்கொண்டு கடந்த சனிக்கிழமை புறப்பட்டுச் சென்றுள்ளது

(இ-9-173)

## பாடசாலைக்கு பெற்றோர் உதவி

சண்டிலிப்பாய் நவ. 22

மானிப்பாய் சென். ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க த.க. பாடசாலைக்கு அங்கு கல்வி பயிலும் மாணவர்களின் ஐந்து பெற்றோர்கள் இணைந்து சுமார் 20 ஆயிரம் ரூபா செலவில் இலவசமாக மின்சார இணைப்பு வேலைகளைச் செய்து கொடுத்துள்ளனர்.

இப்பாடசாலையில் கணனி கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கும், இதர தேவைகளுக்கும் மின்சாரம் அவசியம் தேவைப்படுவதையிட்டு இப்பெற்றோர்கள் தமது செலவில் மின்சார இணைப்பு வேலைகளைச் செய்து கொடுத்துள்ளதாக பாடசாலை அதிபர் சங். சகோதரி மே. த. றடிஸ்லாஸ் தெரிவித்தார். இவர்களின் முன்மாதிரியான சேவைக்கு பாராட்டும் நன்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## சனசமூக நிலையம் புனரமைப்பு

வடமராட்சி, நவ. 22

தும்பளை கிழக்கு சனசமூக நிலையம் 50 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகிறது.

இதற்கான நிதி யாழ். மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. (ஐ-173)

## கண்காட்சி

வடமராட்சி, நவ. 22

செம்பியன்பற்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை முறைசாராக் கல்விப் பிரிவின் தலையலங்காரக்கலை, துணி அச்சிடல் பயிற்சி நெறிகளின் கல்விக் கண்காட்சி இன்று திங்கட்கிழமை அதிபர் வே. அம்பலவாணர் தலைமையில் நடைபெறும்.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி. ப. வேலாயுதபிள்ளை பிரதம விருந்தினராகவும் வடமராட்சிக் கல்விவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. வேணுகோபால் முறைசாராக் கல்வி செயல்திட்ட அலுவலர் வே. அம்பிகைபாசன் ஆசிரிய ஆலோசகர் கொ. குணசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

(ஐ-173)

## நிலக்கடலை உற்பத்தியில் ஆர்வம்

தென்மராட்சி, நவ. 22

பளைப் பிரதேசத்தில் கடந்த வருடம் நிலக்கடலை உற்பத்தி பெரு வெற்றியளித்ததையடுத்து இவ் வருடம் பெருமளவு மக்கள் மேட்டு நிலப்பயிர்ச்செய்கையாக நிலக்கடலை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் விதை நிலக்கடலைக்குப்பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்பட்டது.

[ஐ-117]

## பேச்சுப் போட்டி

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 35 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு பேச்சுப் போட்டிகளை நடத்துவதற்கு மாவட்ட கூட்டுறவுச் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது

பாடசாலை மாணவர்கள் மற்றும் கூட்டுறவுப்பணியாளர். பாடசாலை மாணவர் தவிர்ந்த ஏனையோருக்கான மூன்று பிரிவுகளாக இந்தப் பேச்சுப் போட்டி நடத்தப் படவுள்ளது.

இந்தப் போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ - 17)

---

உ

மங்களகரமான

### திறப்புவிழா

### புதிய யாழ்ப்பாணத் தனியார் வைத்தியசாலை

வாடிக்கையாளர் நன்மைகருதி மீண்டும்

யாழ். ஆனைப்பந்தி சந்தியிலுள்ள தனியார் வைத்தியசாலை மறுசீரமைத்து புதிய நிர்வாகத்தில் 22 — 11 — 99 திங்கட்கிழமை (இன்று) பிற்பகல் 1. 30 — 2. 30 மணி வரையுள்ள சுபநேரத்தில் திறக்கப்படவுள்ளது.

மேற்படி வைத்தியசாலையை சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் திரு. ரவிராஜ் அவர்கள் ஆரம்பித்து வைப்பார்கள்.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள் யாவரும் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

திரு. திருமதி குணரத்தினம்

395 A,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(71166)

---

### ஸ்ரீவல்லிபுரா போட்டோ

SVF

★ கடந்த 04—11—99 வரை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட படச்சுருள்கள் யாவும் பிரதியாக்கம் செய்து வந்து விட்டன.

★ எதிர்வரும் 23—11—99 இங்கிருந்து கொழும்பிற்கு படச்சுருள்கள் அனுப்பி வைக்கப்படும்.

T. P. NO. 070-212720

புலோலி தெற்கு,
புலோலி.

545, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

[71171]

---

### கண்ணீர் அஞ்சலி

எமது மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்

**சீனிவாசகம் பொன்னையா**

அவர்கள் இறைவனடி சேர்ந்து விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/ மல்லாகம் மகா வித்தியாலயம்,
ஆசிரிய நலன்புரிச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

[71159]

---

மாதாந்த
பயிற்சிப் பரீட்சை
(POYA DAY)
இன்று
தரம் 01 — 08 வரை
நடைபெறும்.

வினாத்தாள்கள் விடைகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.

BOND யாழ்ப்பாணம்.

[71170]

---


லிடோ அச்சுவேலி.
பிரஷாந் — ரோஜா
நடித்த
**செம்பருத்தி**
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No.070-212223

---

விண்ணக வாழ்வின்

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி
(1999-11-23 செவ்வாய்க்கிழமை)

மலர்வு 02 — 10 — 1911



உதிர்வு 24 — 10 — 1999

### அமரர் P. M. யோசப்
(மலாயன் பென்சனர்)

'என் சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
என் சாவிலும் என்னை மறவாதீர்கள்'
''உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வு தருபவனும்
நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர்
இறப்பினும் வாழ்வார்'' (புனித யோவான் 11:25)

கருணைக் கடலாகிய இறைவா!
நித்திய காலத்தின் பிரகாசம்
உமது அடியான்

**பிலிப்புப்பிள்ளை மனுவேற்பிள்ளை யோசப்**

அவர்களுக்குப் பிரகாசிக்கக்கடவது;
சமாதான ஒளி அவரில் ஒளிர்வதாக.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 99-11-23 செவ்வாய்க்கிழமை காலை இலங்கை நேரம் 6-30 மணிக்கு யாழ். சுண்டுக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில் நடைபெறும் இரங்கற் திருப்பலியிலும் இல்ல வழிபாட்டிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

''வர்ண வாசம்'',
32, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/9936)

---

### மரண அறிவித்தல்

### மிக்கேல்பிள்ளை ஞானப்பிரகாசம்
(துரை)

மயிலிட்டி மிக்கேல்பிள்ளை அன் சன்ஸ் உரிமையாளர் காலஞ்சென்ற மிக்கேல்பிள்ளை திருமதி சிசிலியா மிக்கேல்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகன் ஞானப்பிரகாசம் (துரை) 17 - 11 - 99 புதன்கிழமை சென்னையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்த்தகர் பேதுருப்பிள்ளை, திருமதி லூர்த்தம்மா பேதுருப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் திருமதி செல்வராணி ஞானப்பிரகாசத்தின் அன்புக் கணவரும் திருமதி ஞானராணி ரவீந்திரன் (லண்டன்), அன்ரன் ஞானராஜ் (சுவிஸ்). ஜோர்ஜ் பிரேம்ராஜ் (சுவிஸ்), திருமதி சுஜேத்திரா கிறேசியன் (கனடா), அனற் கல்பனா (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பற்றிக் ரவீந்திரன் (லண்டன்), கிறேசியன் மரியநேசன் (கனடா). திருமதி பிறிஸ்ஸில்லா ஞானப்பிரகாசம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிறின்சி ஞானப்பிரகாசம், அன்ரன் அஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஞானமலர், ஞானறஞ்சிதம், ஞானரட்னம், ஞானானந்தம், ஞானாமிர்தம், ஞானகுணரட்னம், காலஞ்சென்ற ஞானகுலேந்திரன் ஆகியோரின் சகோதரனும் தேவதிரவியம், சிறில், செல்வரட்னம், செல்வமலர், செல்வம், பற்றிக் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் சென்னையில் நடைபெறும்.

தகவல்:
தேவதிரவியம்
(மைத்துனர்)
குணம் கிறீம் ஹவுஸ்,
பருத்தித்துறை.

Vajgai Appartment,
No19 1 st Cross st,
Kanesh Nagar,
Madippakkam,
Chennai — 91,
S.- India.
T. P No 0091 — 442314725

(71174)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளின்ரன் விஜயத்தைஎதிர்த்து கிரேக்கத்தில் ஆர்ப்பாட்டம்

எதென்ஸ், நவ. 22

மத்திய தரைக்கடல் நாடுகளுக்கான 10 நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்க அதிபர் கிளின்ரன் கிரேக்க நாட்டுக்கு விஜயம் செய்தபோது அங்கு அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

தனது விஜயத்தின் முதற்கட்டமாகத் துருக்கி சென்றிருந்த கிளின்ரன் அங்கிருந்து நேற்று முன்தினம் கிரேக்கம் வந்து சேர்ந்தார்.

அவரது விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இடதுசாரிகள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். நீண்ட நேரம் நீடித்த ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்குப் பொலீஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசினர். அதை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையில் மோதல் வெடித்தது. இந்த மோதலில் சிலர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

சேர்பியா மீது நேட்டோப் படைகள் நடத்திய தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையிலேயே தாம் அமெரிக்க ஜனாதிபதியின் விஜயத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தை நடத்தியதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

அதேசமயம்—

உலகிலேயே விருந்தோம்பலுக்குப் பெயர்பெற்ற கிரேக்கத்தின் பாரம்பரிய விருந்தோம்பலை எதிர்பார்த்தே தாம் அங்கு விஜயம் செய்துள்ளதாகக் கிளின்ரன் தெரிவித்தார்.

[ஐ-6-4]

# வங்கக்கடலில் தாழமுக்கம்! தமிழகத்தில் கடும் மழை!!

சென்னை, நவ. 22

வங்கக் கடலின் தென்மேற்குக் குடாவில் ஏற்பட்டுள்ள குறைந்த தாழமுக்கம் காரணமாக தமிழ்நாட்டின் தென் பகுதிக் கரைபோரக்கிராமங்களில் கடும் மழை பெய்து வருகின்றது.

நேற்று முன்தினம் முதல் பெய்துவரும் மழைக்குநேற்று வரை மூன்றுபேர் பலியாகி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

வட இலங்கைக்கும் தமிழ் நாட்டின் கரையோரப் பிரதேசத்துக்கும் இடையே தாழமுக்கம் தீவிரமடைந்து வருவதாக இந்திய வானிலை அவதானிகள் அறிவித்துள்ளனர்.

இதனால் அடுத்த 48 மணிநேரத்துக்கு தமிழகத்தின் கடலோர மாவட்டங்களிலும் பாண்டிச்சேரியிலும் கடும் மழை பெய்யும் என்றும்—

மழையுடன் மணிக்கு 50 முதல் 60 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும்—

சென்னை வானிலை அவதானிப்பு நிலையம் நேற்று நண்பகல் அறிவித்தது.

மீனவர்களை மீன்பிடிக்கச் செல்லவேண்டாம் என எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

விழுப்புரம மாவட்டத்தின் ஏனாரிமங்கலம் என்ற இடத்தில் நேற்றுக்காலை பெய்த கடும் மழையால் வீட்டின் மண்சுவர் இடிந்து வீழ்ந்ததில் 30 வயதுப் பெண் ஒருவரும் அவரது இரு பெண் குழந்தைகளும் உயிரிழந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

[ஐ-6-4]

# நவாஸ் ஷெரீப் நீதிமன்றில் ஆஜர்

இஸ்லாமாபாத், நவ 22

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் கடந்த வெள்ளி கராச்சியில் உள்ள நீதிமன்றம் ஒன்றில் பொலீஸாரால் ஆஜர்படுத்தப் பட்டார்.

இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப் பயணம் செய்த விமானத்தை கடத்த முயன்றது, அவரைக் கொலை செய்யச் சதி செய்தது உட்பட கிரிமினல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அரசதரப்பு சாட்சிகள் பதிவு செய்யப்படுவதை அவதானிப்பதற்காக அவர் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டிருந்தார். அவருடன் மேலும் 4 பேர் ஆஜர்ப் படுத்தப்பட்டனர்

ஜெனரல் முஷாரப் பயணம் செய்த விமானத்தின் விமானி உட்பட மூன்று பேரின் சாட்சியங்கள் நேற்று முன்தினம் பதிவு செய்யப்பட்டன.

இதேவேளை—

பொலீஸாரின் காவலில் உள்ள நவாஸ் ஷெரீப்பை கட்டாரின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷேக் ஹமாத்தீன் வெள்ளியன்று கராச்சியில் சந்தித்துப் பேசினார்.

கட்டார் அரசாங்கம் கேட்டுக் கொண்டதை அடுத்து ஜெனரல் முஷாரப் இதற்கான அனுமதியை வழங்கி இருந்தார்.

(ஐ-6-4)

# தடாவுக்குப் பதிலாக விரைவில் புதியசட்டம்

புதுடில்லி, நவ. 22

இந்தியாவில் பயங்கரவாதத் தடைச்சட்டமான 'தடா' சட்டத்திற்கு பதிலாக புதிய சட்டம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு மத்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

புதிய சட்டம்தொடர்பான யோசனைகளை முன்வைக்குமாறு சட்ட அமைச்சு, சட்ட ஆணைக்குழு உள்துறை அமைச்சு ஆகியவற்றிடம் மத்திய அரசு கோரி உள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதை அடுத்து இந்தியாவில் தடா சட்டம் அமுலுக்கு வந்தது. 1995 ஆம் ஆண்டுடன் அந்தச் சட்டம் காலாவதியானது. எனினும் அது பின்னர் புதுப்பிக்கப்படவில்லை.

'தடா' சட்டம் மனித உரிமை மீறல்களுக்கு வழி வகுப்பதாக மனித உரிமைக் குழுக்கள் பல கண்டனம் தெரிவித்திருந்தன. இதனை அடுத்தே அந்தச்சட்டத்தைப் புதுப்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லைஎன்று தெரிவிக்கப்பட்டது.

புதிய சட்டம் 'தடா' சட்டத்துக்கு இணையானதாக இருக்கும் எனினும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் தயாரிக்கப்படும் என்றும்—

தீவிரவாதிகள்; தேசவிரோதிகள் ஆகியோருக்கு புதிய சட்டத்தின் அடிப்படையில் பிணை அனுமதி அளிக்கப்படாது என்றும்—

## உலக அரங்கில்

குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாமல் ஒருவரை நீண்ட காலம் காவலில் வைத்திருக்க புதிய சட்டம் இடமளிக்காது என்றும்—

அதிகாரிகள் தெரிவித்தனர்.

[ஐ-6-4]

# சைக்கிள் திருத்தும் கடையில் குண்டு வெடித்து 6 பேர் பலி

## பாகிஸ்தானின் லாகூரில்

இஸ்லாமாபாத். நவ 22

பாகிஸ்தானின் லாகூர் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் 6 பொது மக்கள் கொல்லப்பட்டனர். 18 பேர் காயமடைந்தனர்.

சைக்கிள் திருத்தும் கடை ஒன்றினுள் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளில் பொருத்தப்பட்டிருந்த— நேரம் கணித்து வெடிக்கவைக்கும்— குண்டே வெடித்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களின் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் குண்டுவெடிப்புக்கு இதுவரை எவரும் பொறுப்பேற்கவில்லை பொலீஸார் விசாரணைகளை தீவிரப் படுத்தி உள்ளனர்.

கடந்த வாரம் பாகிஸ்தானில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மற்றும் ஐ. ா. அலுவலகம் ஆகியவற்றின் மீது நடத்தப்பட்ட றொக்கெற் தாக்குதலுக்கும் இந்தத் தாக்குதலுக்கும் இடையே தொடர்புகள் இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

## இந்திய நாடாளுமன்றத் தேர்தலில்

# சோனியா போட்டியிட்டதை எதிர்த்து மனுத்தாக்கல்

புதுடில்லி, நவ. 22

இந்தியாவில் அண்மையில் நடைபெற்று முடிந்தநாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி அமேதி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி அடைந்ததை எதிர்த்து நீதிமன்றில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பட்னாவின் பெரும் வர்த்தகரும் அமேதியில் சோனியாவை எதிர்த்துச் சுயேச்சையாகப் போட்டியிட்டவருமான ஹரிசங்கர் ஜெயின் என்பவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

ராஜீவ்காந்தி — சோனியா திருமணம் இந்தியச் சட்டப்படி அங்கீகரிக்கப்படவில்லை என்றும்—

அதனால் இத்தாலியில் பிறந்தவரான சோனியா இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டது செல்லுபடியாகாது என்றும்—

அவர் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த தேர்தலில் கர்நாடகாவின் பெல்லாரி மற்றும் அமேதி ஆகிய இரு தொகுதிகளில் போட்டியிட்ட சோனியா இரண்டிலும் வெற்றி பெற்றிருந்தார்.

பின்னர் பெல்லாரி தொகுதி உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்து அமேதி தொகுதியைத் தக்கவைத்துக் கொண்டார்.

(ஐ-6-4)

# சிவாஜி பெயரில் விருது

சென்னை, நவ. 22

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பெயரில் புதிய விருது ஒன்று அறிமுகப் படுத்தப்பட உள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு முதல் சிறந்த திரைப்படக் கலைஞர்களுக்கு இந்த விருது வழங்கப்பட உள்ளதாக தமிழக முதல்வர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

சிவாஜிகணேசனது நடிப்பாற்றலைக் கௌரவிக்கும் வகையில் இந்த விருது ஏற்படுத்தப்பட உள்ளது.

(ஐ-6-4)

## இந்தோனேசியாவில்

# மதக் கலவரத்தில் 6 பேர் சூட்டுக்குப் பலி!

இந்தோனேசியாவின் மாலுக் மாகாணத்தில் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையேயான கலவரத்தை அடக்குவதற்காக பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் 6 பேர் உயிரிழந்தனர்; 20 பேர் காயமடைந்தனர்.

அந்த மாகாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் மூண்ட கலகம் பெரும் வன்முறையாக வெடித்தது. அதனை அடக்குவதற்கான பொலீஸாரின் முயற்சி தோல்வி அடைந்ததை அடுத்து பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகக் கூறப்பட்டது.

நேற்றுக் காலை முதல் வன்முறை கட்டுப்பாட்டுக்கு வந்துள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர். வன்முறைகளுக்கு பயந்து ஆயிரக்கணக்கான மக்கள் மாகாணத்தை விட்டு தப்பியோடி விட்டதாக அதிகாரிகள் அறிவித்துளனர்

(ஐ-64)

# 13 வயது அமெரிக்கச் சிறுவன் சிறுமியைச் சுட்டுக்கொன்றான்

வாஷிங்ரன். நவ. 22

அமெரிக்காவின் நியூமெக்சிக்கோ மாநிலத்தில் 13 வயதுச் சிறுவன் ஒருவன் தனது வயதை ஒத்த சிறுமி ஒருத்தியைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளியன்று காலை இந்தச் சம்பவம் இடம் பெற்றதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

தனது நண்பியான அந்தச் சிறுமியின் தலையில் துப்பாக்கியால் சுட்ட அந்தச் சிறுவன் தான் கல்வி கற்கும் பாடசாலை அதிபரையும் உப அதிபரையும் சுட்டுக்கொல்லப் போவதாக மிரட்டி உள்ளான் என்று பொலீஸார் கூறினர்.

தலையில் பலத்த காயமடைந்த சிறுமி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சனியன்று உயிரிழந்தார்.

அந்தச் சிறுவன் இந்தக் கொலையை எதற்காகச் செய்தான் என்பது குறித்து இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் சொன்னார்.

அண்மைக் காலமாக அமெரிக்காவில் பாடசாலைச் சிறுவர்கள் கொலைகளில் ஈடுபடுவது அதிகரித்துள்ளது.

[ஐ-6-4]

# இரு பஸ்கள் மோதி 22 பயணிகள் உடல்கருகிப் பலி

லுவாண்டா, நவ. 22

நைஜீரியாவில் இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதி எரிந்ததில் 22 பேர் உடல் கருகிப் பலியாகினர். மேலும் 15 பேருக்கு தீக் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

வீதியில் சென்று கொண்டிருந்த பஸ் நிறுத்தப்பட்டிருந்த லொறி ஒன்றினை கடக்க முயன்றபோது எதிரில் வந்த பஸ்ஸுடன் மோதியதை அடுத்து தீப்பிடித்து எரிந்தது.

இறந்தவர்களில் 16 பேர்களின் உடல்கள் அடையாளம் காண முடியாத அளவுக்குக் [illegible] தெரிவித்தனர்.

(ஐ-6-4)

# இந்திய - மலேசிய உறவு முறுகல் நிலையில்

இந்தியாவுக்கும்—மலேசியாவுக்கும் இடையிலான உறவில் முறுகல் நிலை உருவாகியுள்ளது என்று சி. பி. ஐ முன்னாள் பணிப்பாளர் ஜோகிந்சிங் தெரிவித்துள்ளார்.

போபர்ஸ் பீரங்கி ஊழல் தொடர்பாக விசாரணை செய்யப்பட வேண்டிய சோனியா காந்தியின் உறவினரான ஒருவர் மலேசியாவில் தங்கியுள்ளார் என்றும்—

அவரை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை மலேசியா அரசு இது வரை ஏற்கவில்லை என்றும்—

இதன் காரணமாக அந்த நாட்டுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவில்முறுகல் நிலைதோன்றியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

யாழ்.கஸ்தூரியார் வீதியில் மூக்குக் கண்ணாடி ஒன்று தவறிவிட்டது. கண்ணாடி உறையில் பி. யேக்கப், சலுசலா என பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் மின்சாரநிலைய வீதியில் உள்ள சலுசலா நிறுவனத்திலோ அல்லது யாழ். ப. நோ. கூ. ச., கே. கே. எஸ். வீதி என்னும் முகவரியிலோ ஒப்படைத்து உதவும்படி தயவுடன் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. சன்மானம் வழங்கப்படும்.

(71152)

## பௌதிகவியல்

பௌதிகவியல் இணைந்த கணிதம் தூய / பிரயோக கணிதம் அனுபவமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியரினால் சிறப்பாக குறுகிய காலத்தில் முழுப்பாடத்திட்டமும் முடிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் (பெற்றோர் தொடர்பு விரும்பத்தக்கது) R பாலசுப்பிரமணியம் B.Sc (Cey), Dip in Ed 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(71163)

## வீடு வாடகைக்கு

கோப்பாய் வடக்கு பருத்தித்துறை பிரதான வீதியிலுள்ள (AGA காரியாலயத்துக்கு அண்மையில்) நிரந்தர பாவிப்பில் இருக்கும் சகல வசதிகளும் உள்ளடங்கிய விரைவில் மின்சாரம் கிடைக்க உள்ளதுமான வீடு வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு முத்துவேல், கோப்பாய் வடக்கு.

(71061)

## விற்பனைக்கு

நல்லின ஒட்டு எலுமிச்சை, ஒட்டு விலாட், கறுத்தக் கொழும்பான் விற்பனைக்கு உண்டு. தொடர்பு K. K. குகனேசன், மங்களா பவனம், கச்சாய் வீதி, சாவகச்சேரி.

(71143)

வீட்டுப்பாவனைப்பொருகள், கதிரை, மேசை, கட்டில், Chest of drawer, வாங்கு, Fridge, மோட்டர், கூரை மின்விசிறி, Iron Box மற்றும் மின்சார உபகரணங்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: முத்துவேல், கோப்பாய் வடக்கு, AGA அலுவலகம் அண்மை.

(71062)

## வெளிவந்து விட்டது

சிவாச்சார்யர்களுக்கு உகந்த திருத்திய இரண்டாம் பதிப்பாக அழகிய கணனி அச்சில் வெளிவந்து விட்டது, ''சோடச நாம மஞ்சரி'' தேவைகளுக்கு கி. சதாசிவ சர்மா கீதாலயம், மட்டுவில் சாவகச்சேரி. விலை 35/-

(71168)

## அறை வாடகைக்கு

யாழ். நகரில் அறை வாடகைக்கு உண்டு. தொடர்பு: ந.விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், அல்லது நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை.

(71147)

## சித்தி விநாயகர் சோதிடம்

சாதகம் எழுத, தீர்க்கமான பலன் அறிய, விவாகப் பொருத்தம் பார்க்க, விவாகத் தாமதம், கிரக தோசத்திற்குச் சரியான பரிகாரம் காண சகலவிதமான யந்திரங்களுக்கும் நாடுங்கள்: கொழும்பில் 22 வருடம் அனுபவம் வாய்ந்த சோதிடர் விஸ்வபிரம்மஸ்ரீ மா. தங்கவேல் இல. 9, டச்சுவீதி, சாவகச்சேரி.

(71133)

## வீடு விற்பனைக்கு

சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி ஆ. மரியதாஸ் (சொர்ணம்மா) இல. 26, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

(71150)

# பாராட்டுகின்றோம்



## திரு. சங்கரப்பிள்ளை இராசரத்தினம் J.P.

மீசாலை வடக்கைச் சேர்ந்த திரு. சங்கரப்பிள்ளை இராசரத்தினம் அவர்கள் 15-11-99 அன்று யாழ். பதில் நீதிபதி திரு ம. திருநாவுக்கரசு முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

இவரை மீசாலை வாழ் மக்களுடன் மீசாலை வடக்கு சனசமூக நிலையம், அறிவொளி சனசமூக நிலையம், ஐக்கிய நாணயசங்கம் என்பனவும் இணைந்து வாழ்த்துகின்றன.

மீசாலை வடக்கு.

(71009)

# சாளி தொலைத் தொடர்பு நிலையம்

நீர்வேலி தெற்கு, கந்தசாமி கோயிலடி.

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்புகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்.

கட்டண விவரம்

வெளிநாடு 110/-
வெளிச் செல்லும் அழைப்பு 6/-
உள்வரும் அழைப்பு 3/-

உள்வரும் அழைப்புகளுக்கு 30 நிமிடத்துக்கு மேல் கட்டணக் குறைப்புண்டு.

இல. வெளிநாடு: 0094-70-212543
உள்நாடு: 070 - 212543

உரிமையாளர்
க. காங்கேசன்

நீர்வேலி தெற்கு.

(71144)

**We regret to inform the Death of our friend, teacher and distinguished alumnus of Jaffna College**

## Dr. Dante J. Thurairatnam

( Professor, Bowling Green State University, U S A )

on 19th November 1999, at Bowling Green, Ohio 43402, U.S.A.

A Memorial Service will be held in 'Ottly Hall' on Tuesday the 23rd November at 9.00 a.m.

Friends and Alumni are cordially invited.

Principal,
Jaffna College,

724, North Main Street,
Bowling Green, Ohio 43402.

(C/9924)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## ஐயாத்துரை செல்வமலர்

தோற்றம் 24-04-1946
மறைவு 08-11-1998

திதி: 22-11-1999

இன்று (22-11-99) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் ஆண்டுக் கிரியை இடம்பெறும்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

ஐயாத்துரை
(கணவர்)

நாவற்குழி,
கைதடி.

(71164)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி இரஞ்சிதபூசணி மகேஸ்வரி

(இரஞ்சிதம்)

மலர்வு 24-06-1947
உதிர்வு 13-12-1997

காராக வானமே எம்மோடு கண்ணீர்
சொரிந்தாலும்
கார்த்திகைப் பௌர்ணமி உம் போல
தண்ணொளி தந்தாலும்
வாராதே நீர் மகவை சான்றோனென்றுவக்கும்
நாள் — ஆதலால்
சேர்க்கின்றோம் உம் காலடிக்கு வார்
கண்ணீர்ப்பூக்களையே!

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கணவன், பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள்.

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

[71167]

# கால்நடை வைத்தியா நியமனப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 22

கால்நடை வைத்தியர்களுக்கு நியமனம் வழங்குவதற்குரிய பரீட்சை எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு - 8. பாக் அவன்யுவில் அமைந்துள்ள இரத்தினா வெலி பெண்கள் பாடசாலையில் நடைபெறவுள்ளதாக யாழ்ப்பாணம் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

கால்நடை மருத்துவபீடத்திலிருந்து கால்நடை வைத்தியர்களாக சித்தியெய்தி வெளியேறிய கால்நடை வைத்தியர்களுக்க இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளது. [க]

## பாலர் ஆசிரியராக...

க.பொ.த (சா/த) கடைசித் தகைமை. ஆறு மாதத்தில் தபால்வழியில் பயிற்சி.

விவரங்களுக்கு:

**பாலர் ஆசிரியர் சங்கம்**
கொக்குவில்.

(71106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன் யுத்தத்தை நிறுத்திப் பேச்சு நடத்துமாறு

# சமாதானத்துக்கான குழு ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், நவ. 22

தொடரும் உயிர்ப் பலிகளை நிறுத்துவதற்கு உடனடியாக யுத்த நிறுத்தம் பிரகடனம் செய்து சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அண்மையில் அனுப்பி வைத்துள்ள மகஜரில் வலியுறுத்தியுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். குடாநாட்டில் மூடிய பொருளாதார நிலையே காணப்படுகிறது. பாதுகாப்பு சூழ் நிலையினால் மக்கள் தினமும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை நிலை ஏனைய பிரதேச மக்களுடன் ஒப்பிடுகையில் தரன் குறைந்து காணப்படுகிறது. பயணிகள் கப்பல் சேவை இது வரையும் சீராக்கப்படவில்லை.

மீளக்குடியமர்ந்தவர்களில் 20 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 70 ஆயிரம் பேர் தொடர்ந்தும் இடம்பெயர்ந்த நிலையில் பல கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். யாழ்ப்பாணம் ஒரு வரண்ட பிரதேசம். குடி தண்ணீர்க் கிணறுகள், நீர் நிலைகள் வற்றிக் கொண்டே வருகின்றன. மிக விரைவில் குடி தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தொழில்துறை, வணிக முயற்சிகளை மீளப் புனரமைப்பதற்கு மின்சாரம் அத்தியாவசியமாகவுளளது. யாழ்ப்பாணத்திற்கு 375 மெகாவாட் மின்சாரம் தேவைப்படுகின்றபோதும் 10 மெகாவாட் மின்சாரமே வழங்கப்படுகிறது. அதிகாரப் பரவலாக்கல் பொதி தொடர்பாக முரண்பட்டுக் கொண்டிருக்கிறவர்களுடன் பேச்சுக்கள் நடத்த வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

சமாதானத்துக்கான போர் என்பது முடிவற்றதாகவே இருக்கும். இதனால் எதிர்கால இளம் சந்ததியினரை நாம் இழக்க முடியாது.

மாண்புமிகு ஜனாதிபதி அவர்களே நீங்கள் உங்கள் அதிகாரத்தைப்பிரயோகித்து யுத்த நிறுத்தத்தைப் பிரகடனம் செய்துசம்பந்தப்பட்டவர்களுடன் உடனடியாகப் பேச்சு நடத்த வேண்டும்.

இக் கடிதம் உங்கள் நேரடிப்பரிசீலனைக்குகிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் மக்கள் குழு சமாதானத்தையும் நல்லெண்ணத்தையும் சகல இன மக்களிடத்திலும் பேணிக்காப்பதற்கு துணையாக இருப்பதற்கு உறுதி பூண்டுள்ளது.

இப்படி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5)

## நாய்கள் அழிப்பு

தென்மராட்சி, நவ. 22

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை உப பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலியாக அலையும் நாய்கள் சரசாலைப் பிரிவுப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன.

பின்வரும் இடங்களில் பின்வரும் திகதிகளில் நாய்கள் பிடித்து அழிக்கப்படவுள்ளதால் வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறு உப பணிமனைப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

இம்மாதம் 24 ஆம் திகதி சரசாலைப் பகுதியிலும்—

25 ஆம் திகதி மட்டுவில், கைதடி, நுணாவில் பகுதிகளிலும்—

27 ஆம் திகதி வேம்பிராய், மீசாலை வடக்கு ஆகிய பகுதிகளிலும்—

கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

### காரைநகரில் பயிர்களை அழித்த

## 6 கட்டாக்காலி மாடுகள் ஏலத்தில் விற்கப்பட்டன

காரைநகர், நவ. 22

காரைநகர் வயல்களில் பெரும்போக நெற்பயிர்களை மேய்ந்த ஆறு கட்டாக்காலி மாடுகள் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் முன்னிலையில் காரைநகர் மேற்கு விவசாய சம்மேளனத்தால் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன.

இம்மாடுகள் 22 ஆயிரம் ரூபாவிற்கு விற்கப்பட்டது. கடந்த மாதம் காரைநகர் வயல்களில் வைத்து விவசாய சம்மேளனத்தால் பிடிக்கப்பட்ட இம்மாடுகள் உரிமையாளர்களால் உரிமை கோரப்படாமையால் ஏலத்தில் விடப்பட்டன.

[ஐ-73]

## அரசசார்பற்ற இணையத்துக்கு ஈமெயில், பக்ஸ் வசதிகள்

யாழ்ப்பாணம், நவ. 22

கொழும்பிலுள்ள மனித நேய அமைப்புக்கள் ஒன்றியத்தின் உதவியுடன் யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் ஈ மெயில், கணனி, பக்ஸ் வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கென உத்தியோகத்தர் ஒருவரும் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதற்கென தனி அலுவலகம் ஒன்றும் இணையத்தினால் திறக்கப்படவுள்ளதாக இணைய வட்டாரங்கள் தெரிவித்தன.

(3-5)

## போஷாக்கு விழிப்புணர்வு போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ. 22

பாடசாலை மாணவர்களிடையே போஷாக்குப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தீவக வலயக் கல்வி அலுவலகத்தினால் நடத்தப்பட்ட கட்டுரை, சுவரொட்டிப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கட்டுரை, சுவரொட்டிப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

### கட்டுரைப்போட்டி

★ பிரிவு i

ம. கினித்தா (நயினாதீவு ஸ்ரீ கணேசா), யோ. கனகரஞ்சினி (நெடுந்தீவு பாரதி), த. தர்சிகா (நெடுந்தீவு ம. வி).

★ பிரிவு ii

து. ரஜனிகா (யாழ்ரன் கல்லூரி), க. லோகேஸ்வரன் (நெடுந்தீவு ம.வி), கோ. மதுஷன் (நயினாதீவு ம. வி)

★ பிரிவு iii:-

சி. நிறோஜினி (நாரந்தனை றோ.க), அ. பமிலா நாரந்தனை றோ. க), இ. டெனிஸ்ரன் (கரம்பொன் சண்முகநாதன்).

★ பிரிவு iv:-

எ. நிதினி (புனித மரியாள் பெண்கள் வித்.), பா. சகாய மெல்டா (நெடுந்தீவு றோ.க), பு. ஜெயரூபன் (நயினாதீவு ம.வி).

★ பிரிவு v :-

த. பாலமுருகன் (நயினாதீவு ம. வி), ச. ஜெயந்தி (கலாநிதி ஆ. தியாகராஜா ம.வி), க. உஷாந்தினி (நெடுந்தீவு ம.வி.).

### சுவரொட்டிப்போட்டி

★ பிரிவு ! :-

அ. றெஜிதாஸ் (நெடுந்தீவு சீகிரியாம் பள்ளம்), அ ஜெயதாஸ் (நெடுந்தீவு சீகிரியாம் பள்ளம்), த. சுரேந்திரன் (நயினாதீவு நாகபூஷணி).

★ பிரிவு ii:-

தி. ராகவன் (யாழ்ரன் கல்லூரி), த. சிவாஜினி (நெடுந்தீவு சைவப்பிரகாச), இ. ராஜீவ் (நயினாதீவு கணேசா)

★ பிரிவு iii :-

பா. கீதன் (நயினாதீவு ம. வி.), ஏ. சசிகரன் (நயினாதீவு கணேசா), இ. இந்திரராஜா (நயினாதீவு கணேசா).

## ஆசிரியர் நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 22

தீவகக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் பணியாற்றவெனதமிழ்மொழி மூலதகுதிகாண் ஆசிரியர்கள் நால்வர் நியமனம் பெற்றுள்ளனர்:

பி. பார்த்தீபன் (கரவெட்டி மேற்கு), ஜீ. கணேஷ் (ஏமாலை வடக்கு), என். ஸ்ரீரங்கநாதன் (இடைக்குறிச்சி, வரணி), என். புவனேஸ்வரி (பண்டிதர்குடியிருப்பு, கெற்பலி) ஆகியோரே கடந்த 15 ஆம் திகதி முதல் செயற்படும் வண்ணம் நியமிக்கப்பட்டுள்ளனர்எனவும்—

நியமனம் பெற்றவர்கள் உடனடியாக தீவகக் கல்வி வலயத்துக்கு சமுகமளித்து நியமனக் கடிதங்களைப் பெற்று கடமையைப் பொறுப்பேற்றுக்கொள்ளுமாறுவலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

(ஐ-7)

## முதியோருக்கு உடுபுடைவைகள்

சண்டிலிப்பாய், நவ. 22

குரும்பசிட்டி நலிவுற்றோர் நலனோன்பு நிலையம் இம்மாதம் 6 ஆம் திகதி நடத்திய முதியோர் தின விழாவில் 40-க்கு மேற்பட்ட முதியவர்களுக்கு உடுபுடைவைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

உரும்பிராயில் இயங்கி வரும் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இவ் விழாவுக்கு யாழ். பிராந்திய உதவிஉள்ளூராட்சி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி தலைமை வகித்தார். உரும்பிராய் லயன்ஸ் கழகத் தலைவர்இ. நடராசா பிரதம அதிதியாகவும், டாக்டர். க. பிரதீப்குமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

(ஐ-135)

## ஆஸ்பத்திரிக்கு நீர் இறைக்கும் இயந்திரம்

வலி. கிழக்கு, நவ. 22

கோப்பாய் ஆஸ்பத்திரிக்கு நீர் இறைக்கும் இயந்திரம் சுகாதாரத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆஸ்பத்திரியின் பாவனையில் இருந்து வந்த நீர் இறைக்கும் இயந்திரம் அண்மையில் களவாடப்பட்டதன் காரணமாக நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியதாகவும் —

இதன் பொருட்டு ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரியின் வேண்டுதலின் பேரில் இந்த உதவி வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[ஐ-8-180]

## காலம் கடந்த மருந்து விற்பனை யாழ். நகரில் அதிகரித்துள்ளது

### நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.22

யாழ். நகரிலுள்ள மருந்து விற்பனை நிலையங்களில் தடைசெய்யப்பட்ட கருத்தடை மருந்துகள் மற்றும் காலம் கடந்த மருந்துப் பொருள்களின் விற்பனை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக யாழ். சுகாதாரப் பகுதி உணவு மருந்துப் பரிசோதகர் எஸ். மகாதேவனிடம் பாதிக்கப்பட்ட பலர் முறைப்பாடு செய்துள்ளனர்.

இம் முறைப்பாடுகளைத் தொடர்ந்து குறிப்பிடப்பட்ட கடைகளில் விற்பனை செய்யப்படும் மருந்துப் பொருள்களைப் பறிமுதல் செய்யும் நடவடிக்கைகளில் உணவு மருந்துப் பரிசோதகர் ஈடுபட்டுவருகிறார்.

(இ 3-5)

## ஐயப்பசுவாமி மகரஜோதி மண்டல பூசை சுவிஸில்

கொழும்பு, நவ. 22

சுவிட்சர்லாநது ஐயப்ப பக்தர்களின் ஏற்பாட்டில் ஸ்ரீசாஸ்தா பீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்களின் தலைமையில் ஐயப்பசுவாமி மகரஜோதி மண்டல பூசை கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பமாகி உள்ளது.

அடுத்த வருடம் ஜனவரி 3 ஆம் திகதி வரை அது நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் மூன்று தினங்கள் இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதி கலாநிதி ஸ்ரீஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியாரின் தலைமையில் இடம்பெற உள்ள மகர ஜோதி விழா சிறப்பு நிகழ்வுகளில் விசேட ஐயப்பன் பஜனையும் பதினெட்டாம்படி விசேட பூசையும் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம் பெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக எதிர்வரும் 28ஆம் திகதி ஸ்ரீஐயப்பதாஸக் குருக்கள் சுவிட்சர்லாந்து பயணமாகிறார்.

இந்த ஆராதனைகளைத் தொடர்ந்து சுவாமிகள் சுவிட்சர்லாந்தின் சூர் மாநகர் ஸ்ரீ விநாயகர்ஆலய விசேட பூசைகளில் கலந்துகொள்வார்.

## ஆங்கில ஆசிரியர் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ். மாவட்டத்தில் ஆங்கில பாடத்தை பகுதி நேரமாகக் கற்பிக்கும் ஆசிரியர்களின் விவரங்கள் யாழ். மாவட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கத்தினால் திரட்டப்படுகின்றன.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் அனைவரையும் இன்று திங்கட்கிழமை காலை 9. 30 மணிக்கு ஆரியகுளம் சந்தியிலுள்ள புதிய உயர் கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு சங்கம் கேட்டுள்ளது.

மேற்படி ஆசிரியர்களிடமிருந்து அன்றைய தினம் மேலதிக விவரங்கள் திரட்டப்படவுள்ளதால் 45 வயதுக்கு உட்பட்ட சகலரும் ஜி சி ஈ உயர்தர, சாதாரண தர கல்விச் சான்றிதழ்களின் 2 நிழற்படப் பிரதிகளுடன் சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ-9)

### அச்சுவேலி, ஆவரங்கால் பகுதியில்:

## ஞாயிறு கடை திறப்பதால் ஊழியர்கள் பாதிப்பு

வலி. கிழக்கு, நவ. 22

அச்சுவேலி, ஆவரங்கால் பகுதியில் சாய்ப்புச்சட்டம் சரிவர அமுல் செய்யப்படாததால் ஊழியர்கள் பாதிக்கப்படுவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

அச்சுவேலி, ஆவரங்கால் பகுதியில் உள்ள சகல வர்த்தக நிலையங்களும் சேர்ந்து வர்த்தக சங்கம் ஒன்றை அமைத்துள்ள போதும் இப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடைகள் திறக்கப்படுவதாகவும் —

இதனால் கடைகளில் பணியாற்றும் ஊழியர்கள் பாதிக்கப்படுவதாகவும் —

தெரிவிக்கப்பட்டது.

கடைகளை ஞாயிற்றுக் கிழமைகளில் மூடுமாறு அண்மையில் வர்த்தகசங்கம் அறிவித்திருந்த போதும் அது சரிவரக் கடைப்பிடிக்கப்படுவதில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

(ஐ-4-180)

## வாசகர் திருமுகம்

### கார்த்திகைத் திருநாள்: ஒரு வேண்டுகோள்

இன்று திங்கட்கிழமை (22-11-99 இல்) சைவமக்களின் முக்கிய தினங்களில் ஒன்றான கார்த்திகைத்தீபத்திருநாளாகும். இத்திருநாளில் எண்ணெய்த்தீபங்கள் ஏற்றி திருமாலுக்கும் பிரமனுக்கும் சிவபெருமான் சோதி ஒளி வடிவாகக் காட்டி நின்ற காட்சியை, நினைவு கூர்ந்து கற்பனையில் கண்டு வழிபட வேண்டிய நாள்.

இத்திருநாளில் இளைஞர்கள் சிலர் 'ரயர்' கொளுத்திக் கொச்சைப்படுத்துவதைச் சுட்டிக்காட்டி கடந்த வருடம் வாசகர் திருமுகப்பகுதியில் சிலர் எழுதியிருந்ததால், நற்பலனும் கிடைத்தது.

இருந்தபோதும் முற்றாக இவ்விழிசெயலை நிறுத்துவதற்கு பெற்றோர்கள், பெரியோர்கள், ஆசிரியர்கள், ஆலயக்குருமார்கள், இந்து இளைஞர் மன்றங்கள் இவ்வருடமும் அக்கறை கொண்டு ஆவன செய்ய வேண்டும்.

— கே. தவராஜ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **சரவணமுத்து இராசையா**

தோற்றம் 18 - 11 - 1910

மறைவு 03 - 12 - 1998

திதி: 22 - 11 - 99

நீங்கள் எம்மை விட்டு மறைந்து ஓராண்டு போனாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டகலா.

உங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கும்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


ஆனைக்கோட்டை சந்தி,
ஆனைக்கோட்டை.

(71126)

## ஓராண்டு நீங்காத நினைவஞ்சலி

மலர்வு: 05 – 11 – 1940

உதிர்வு 02 – 12 – 1998



அமரர்

**இராசையா இராசலிங்கம்**

ஓராண்டு காலம் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் மறைவதில்லை.
இணையில்லாத் துணைவரே!
அன்பின் உருவமாய் அணைக்கும் தந்தையே!
அமுதமொழி கூறி ஆதரிக்கும் மாமாவே!
அன்பின் அம்மப்பாவே! அருமை அப்பப்பாவே!
ஆறவில்லை எங்கள் துயரம்.
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டு
அகலாது ஐயா!

என்றும் நினைவுகளுடன்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

373/2 நாவலர் றோட்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

( ராஜன் போட்டோ )

(71110)

## விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 22

நில அளவைத் திணைக்களத்தில் பட வரைஞர் பதவிகளுக்கு ஆள்சேர்ப்பது தொடர்பான விண்ணப்ப முடிவுதினம் இம்மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட நில அளவை அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தப் பதவிக்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் நான்காம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

(ஐ-க)

FAN & LIGHT 2x1

SAVE ELECTRICITY



IDEAL FOR STUDENTS & INDIVIDUAL USE

LANKA NIPPON

No. 18 Keyzer Street, Colombo 11
Tel: 437735 Fax: 437736
No.10, Trelawny Place,(Behind Milk Bar),Bambalapitiya Junction,
Colombo 4 Tel.589992

( )

ஈசன் கல்வி நிலையம்
கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில்.

பௌதிகவியல்
A/L 2000
இலத்திரனியல்

திரு குமரன் B. Sc.
ஆரம்பம்; 22-11-99
(திங்கள்) 4.30 P m.

(71134)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்,
121, 2ஆம்
குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்: 2459

(70764)

## வாழ்த்துகின்றோம்

யா/ வாதரவத்தை
விக்கினேஸ்வர வித்தியாலயம்
புத்தூர்

1999ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில்
செல்வி இரவீந்திரநாதன் சோபிகா
120 புள்ளிகளைப் பெற்று சிறப்பாகத் தேர்ச்சியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

யா/ வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்,
புத்தூர்.

(71124)

தென்மராட்சி கிழக்கு
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
கொடிகாமம்

## கேள்விப் பத்திரங்கள்

எமது சங்கத்திற்குக் கொண்டுவரப்படவிருக்கும் புதிய லங்கா அசோக் லெய்டன் (லொறி அடிச் சட்டத்திற்கு) லொறி உடற்கோப்பு அடிப்பதற்குக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. திருப்பி வழங்கப்படாத கட்டுப்பணம் ரூபா 100 ம், திருப்பி வழங்கப்படும் கட்டுப்பணம் ரூபா 250 இனையும் சங்கக் காசாளரிடம் செலுத்தி 10-12-99 ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிவரை விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில் 'பொது முகாமையாளர், தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம், கொடிகாமம்' என்ற விலாசத்திற்கு 15-12-99 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்.
தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்.
கொடிகாமம்.
18-11-1999.

(சி/9907)

## நன்றி நவிலல்

02 - 11 - 99 அன்று அகால மரணமடைந்த
எமது குடும்பச் செல்வம்

செல்வி

**ஆறுமுகம் சியாமளா**

வின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்ட உற்றார் உறவினர்கள், நண்பர்கள், யா/ கலாநிதி ஆ தியாகராசா ம. ம. வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் தூர இடங்களில் இருந்து அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், உதவி புரிந்தவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

க. ஆறுமுகம் (தந்தை)

களபூமி,
காரைநகர்.

(71117)

## நெஞ்சம் மறக்காத 118 ஆம் நாள் நினைவுகள்

தோற்றம் 25 – 09 – 1931



மறைவு: 28 – 07 – 1999

கம்பர்மலை

**திருமதி சிவகாமி இராமச்சந்திரன்**
(மம்மி)

எங்கள் நெஞ்சில் ஆலயமாக அமைந்த குடும்பத் தலைவி அவர்களின் ஆத்மா சாந்தியடைய நெற்கொழு ஆதிவைரவரை வேண்டி நிற்கும்

பாசமிகு
ம. இராமச்சந்திரன்,
(குடும்பத் தலைவன்)
மக்கள், மருமக்கள். பேரப்பிள்ளைகள்.

'சிவகோட்டம்'
கம்பர்மலை,
உடுப்பிட்டி வடக்கு.

(71116)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கல்வி முன்னேற்றம்

கல்வியியல் துறையில் நீண்டகால அனுபவமும், அறிவும் கொண்ட மூத்த பேராசிரியர் வ. ஆறுமுகம் உதயனுக்கு அளித்து செவ்வியில் தெரிவித்துள்ள கருத்து கவனத்தில் எடுக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

இந்த நாட்டில் கல்விமூலம் சமூக மாற்றத்தினை முன்னெடுக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. எனினும் அவற்றின் பயன் தேவையான அளவுக்கு அடிமட்டம் வரை செறிந்து செல்லவில்லை என்ற அவரது கருத்து மனதில் கொள்ளப்பட வேண்டும்.

இலவசக் கல்வி நாட்டில் பெரும் சமூகமாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. அதனால் மிகப் பெரும்பாலான மக்கள் கல்வி அறிவு பெற்றிருக்கிறார்கள் என்பது உண்மையே. ஆயினும் எழுத்தறிவில்லாதவர்கள் இல்லை எனச் சொல்லி விட முடியாது.

கல்வியைப் பெரும் சொத்தாகக் கருதிய, கருதும் யாழ்ப்பாணச் சமூகத்திலேயே கல்வி அறிவு இல்லாதவர்கள் இருக்கவே செய்கின்றனர். குறிப்பிட்ட சத வீதத்தினர் தமது பெயர்களை எழுதமுடியாது கைவிரல் அடையாளம் இடுகின்றனர் என்ற தகவல் அண்மையில் வெளிவந்தது.

ஐம்பது வருடகால இலவசக் கல்வி முழுவெற்றி அளிக்கவில்லை என்பதனையே இந்த நிலைமை எடுத்துக்காட்டுகிறது. கல்வி அறிவு அடிமட்டம் வரை செறிந்து செல்லவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். இலவசக் கல்விமுறை அமுலில் குறைபாடுகளும் ஓட்டைகளும் உள்ளன.

இதற்குக் காரணம் என்ன?

அரசாங்கங்கள் மாறும் போது கல்விக்கொள்கைகளும் திட்டங்களும் ஆட்சித் தலைமைகளின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப மாற்றப்படுகின்றன. வெளிநாடுகளில் நடப்பவற்றைப் பார்த்து படி எடுத்துக் கல்வித்திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. நாட்டின் அடிப்படை நிலைக்கும் சமூக அமைப்புக்கும் உகந்த கல்வி முறைகளுக்கு முன்னுரிமை கொடுப்பதில்லை.

கல்விமான்கள், கல்வி நிபுணர்களிடையே கல்விக் கொள்கைகள், திட்டங்கள் குறித்து முரண்பாடுகள் உண்டு. அவர்கள் ஆட்சிக்கு வரும் இரண்டு கட்சிகளின் பின்னாலும் ஒட்டிக் கொள்கிறார்கள். ஆட்சித் தலைமைகள் மாறும்போது மேற்கூறிய கல்வி நிபுணர்களின் செல்வாக்கும் ஆலோசனைகளும் கல்வி முறைகளில் மாற்றங்களைக் கொண்டு வருகின்றன.

கல்வியானது சமூகத்தை முன்னேற்ற வேண்டும் என்பதற்கு முன்னுரிமை கொடுப்பதைவிட, தமது கட்சியின் கல்வி ஆலோசகர்களின் கொள்கைகளைத் திணிப்பதிலேயே ஆட்சித் தலைவர்கள் அக்கறையாக இருப்பதுண்டு.

அதனால் கல்வித் திட்டங்களும் கல்வி முறைகளும் அடிக்கடி மாற்றப்படுகின்றன. கல்வி நிர்வாகம் அடிக்கடி குழம்பிப் போகிறது. ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும் முன்னரை விட இப்போது மிகவும் குறைந்துவிட்டதும் இன்னொரு காரணம்.

தேசிய கல்விக் கொள்கை வகுப்பதில் அரசியல் செல்வாக்கு இல்லாமல், கல்வி நிபுணர்கள் சுதந்திரமாகவும் சுயேச்சையாகவும் பணியாற்ற வகை செய்யப்படவேண்டும். மாற்றங்கள் தேவை. ஆனால் அவை சமூக முன்னேற்றத்தை இலக்கு வைக்க வேண்டும்.

அத்தோடு ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்ற பயிற்றப்பட்டால் சமூகத்தின் அடிமட்டத்துக்கும் கல்வி செறிவதற்கும் வகை செய்யலாம்.

# கொழும்பில் சிகிச்சைக்குச் சென்ற யாழ். நோயாளிக்கு ஏற்பட்ட அனுபவம்

குடாநாடு அரசாங்க நிர்வாகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்து நீண்டகாலம் கழிந்த நிலையிலும் இங்குள்ள சுகாதாரத்துறைகளில் குறிப்பிடக் கூடிய மாற்றங்கள், வளர்ச்சிகள் எதனையும் காணமுடியவில்லை.

மேலதிக சிகிச்சை பெறுவதற்காக சாதாரண நோயாளிகள் கூட இங்கிருந்து கொழும்புக்கும் பிற இடங்களுக்கும் செல்ல வேண்டிய நிலைமை இன்னமும் இருந்து வருகிறது. இத்தகைய மேலதிக சிகிச்சை பெறச் செல்லும் இடங்களில் குடாநாட்டு நோயாளிகள் படும் துன்பங்கள், அவஸ்தைகள் ஏராளம். நோயின் பிடியில் இருந்து விடுபட அங்கு செல்வோர் நோய் குணப்பட்ட நிலையில் அல்லது குணப்படாத நிலையில் இங்கு திரும்பி வருகின்றனர். சென்ற இடங்களில் — ஆஸ்பத்திரிகளில் — அவர்கள் பெறும் அனுபவங்கள் நோயைவிட அதிகமாக அவர்களை வருத்திவிடுகின்றன.

கொழும்பு தேசிய ஆஸ்பத்திரிக்குச் சென்று திரும்பிய குடாநாட்டு நோயாளி ஒருவரின் அனுபவம் இது

சண்டிலிப்பாயைச் சேர்ந்த 24 வயதுடைய தொழிலாளியான அந்த நோயாளி தனக்கு நேர்ந்தஅனுபவத்தை 'உதயன்' செய்தியாளரிடம் விவரித்தார்.

கடந்த ஜூன் மாதம் மழை பெய்து ஓய்ந்த ஒரு பொழுதில் கள் சீவுவதற்காக மரத்தில் ஏறிய சமயம் கைகள் வழுக்கி தவறி வீழ்ந்த இவர் படுகாயமடைந்தார்.

இடுப்புப்பகுதியில் பலமாக அடிபட்டதால் முள்ளம் தண்டில் சேதம் ஏற்பட்டிருந்தது.

இடுப்புக்குக் கீழான உடற் பகுதி செயலிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த இவர் மேலதிக சிகிச்சைக்காக கடந்த ஒகஸ்ட் 12 ஆம் திகதி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கிருந்து திரும்பி மீண்டும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் அவர் கொழும்பில் நேர்ந்த அனுபவங்கள் குறித்து தெரிவித்த தகவல்கள் தொகுத்துத் தரப்படுகின்றன.

ஒரு முஸ்லிம் சேவையாளரின் உதவியுடன் கொழும்பு ஆஸ்பத்திரியில் சிங்கள டாக்டரிடம் சிகிச்சை பெற்று வந்தேன். சிகிச்சையில் எந்தப் பலனும் கிட்டாத நிலையில் ஒருநாள் சத்திர சிகிச்சைக்காக களத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டேன். அங்கு காத்திருந்தபோதும் நேரம் போதாமையால் அன்று சத்திர சிகிச்சை நடைபெறவில்லை. திகதி ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் வார்ட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டேன் அதன் பிறகு சத்திர சிகிச்சைக் களத்துக்கு என்னை அழைக்கவே இல்லை. அது பற்றி முஸ்லிம் உதவியாளர் மூலம் டாக்டரிடம் விசாரித்தேன். அவர்கள் எந்தப் பதிலும் தரவில்லை. அடிக்கடி விசாரித்தும் பலன் இல்லை. தொடர்ந்து 42 தினங்கள் அங்கு படுக்கையிலேயே கிடக்க வேண்டியதாயிற்று. இந் நிலையில் என்னை மீண்டும் யாழ்ப்பாணம் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டதை அறிந்தேன்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அம்புலன்ஸ் மூலம் செல்லுமாறு கூறி அதற்கான அனுமதிப்பத்திரமும் வழங்கப்பட்டது.

அம்புலன்ஸ் மூலம் எப்படி யாழ். செல்வதுஎனத் திகைத்தேன்-டாக்டர்களை அணுகி யாழ்ப்பாணத்துக்கு பாதை வழியாக அம்புலன்ஸில் செல்ல முடியாது என்று கூறினேன். கப்பல் மூலமே போக முடியும் என விளக்கினேன். அதற்கு அவர்கள் கூறிய பதில் மிகுந்த வியப்பை ஏற்படுத்தியது.

''... நீர் இங்கே இருக்கிறீர். அங்கே யாழ்ப்பாணத்துக்குப் பாதை எல்லாம் திறந்தாயிற்று ரீ.வியில் கூட படமாகக் காட்டினார்கள். எதுவும் தெரியாத ஆளாக இருக்கிறீர் ... இனி அம்புலன்ஸிலேயே நீர் போகலாம்'' என்று டாக்டர்கள் கூறிவிட்டனர்.

அவ்வளவுதான்.

அனுராதபுரத்தில் இருந்து கொழும்புக்கு நோயாளரை ஏற்றிவந்த ஓர் அம்புலன்ஸில் நான் அங்கிருந்து ஏற்றப்பட்டு அனுராதபுரத்துக்கு அனுப்பப்பட்டேன். அங்கிருந்து மறுநாள் (செப்ரெம்பர் 25 ஆம் திகதி) அம்புலன்ஸ் மூலமே வவுனியாவுக்கு மாற்றப்பட்டேன்,

வவுனியாவுக்கு வந்த நான் அங்கு எந்தவித வசதிகளும் இன்றி யாழ்ப்பாணம் செல்ல வசதியும் இன்றித்தவித்தேன். 25 நாள்களை வவுனியாவில் வேதனையுடன் கழிக்க நேர்ந்தது.

ஆள் உதவி, உணவு, நிதி வசதி இன்றி அல்லற்பட்ட நான் செஞ்சிலுவைச் சங்கத்தினருடன் ஒருவாறு தொடர்பு கொண்டேன். அவர்களுக்கு நிலைமையை விளக்கினேன். மீண்டும் என்னைக் கொழும்புக்கு அனுப்பி வைக்கவே தம்மால் முடியும். யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப முடியாது என்று கூறிவிட்டனர்

இந்நிலையில் அங்கிருந்து பெற்றோருடன் தொடர்பு கொண்டு அவர்கள் மூலமாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின்உதவியைநாடினேன்.

அவர்களின் உதவி கிடைத்தது. தொடர்ந்து கடந்த மாதம் 20 ஆம் திகதி வவுனியாவில் இருந்துதிருமலைக்குச் சென்று பின்னர் அங்கிருந்து செஞ்சிலுவைச் சங்கத்தின் நோயாளர் கப்பல் மூலம் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளேன் விபத்துக்குள்ளாகி 5 மாதங்களாகி விட்டன. மீண்டும் யாழ் ஆஸ்பத்திரிக்கே வந்துசேர்ந்துள்ளேன் இடுப்பின் கீழ்ப்பகுதி இயங்காத நிலையில் அங்கும் இங்கும் அலைக்கழிக்கப்பட்டது தான் மிச்சம். இது எனது தலைவிதி அல்ல; தமிழர்களின் தலைவிதி. தென்பகுதி டாக்டர்களின் பாராமுகம். அசமந்தம் என்பவற்றை யாரிடம் போய் முறையிட முடியும்? என்று வேதனையுடன் கூறி முடித்தார் அந்த நோயாளி இளைஞன்

— ஹரன்

# திருவிளக்கேற்றி வழிபாடியற்றும் திருக்கார்த்திகைத் தீபத் திருநாள்

இன்று திருக்கார்த்திகைத் தீப நன்னாள் இந்தத் தீபத் திருநாளை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகின்றது.

மாலயன் தேட, மறை தேட, வானவர் தேட, கற்பனைக்கும் எட்டாமல் கடந்து சோதியாய் நின்ற பரம்பொருளின் திருவிளையாட்டின் திருப்பயனைப் பெற்றுய்யவே கார்த்திகைத் திங்களில் வரும் கார்த்திகைநட்சத்திரத்தன்று அதற்குத் திருக்கார்த்திகையென நாமம் சூட்டி தீபமேற்றிக் கொண்டாடுகின்றனர் சைவமக்கள்.

இத்தீபத் திருநாள் திருக்கார்த்திகையென்றும்விளக்கீடு என்றும் சொக்கப்பானை என்றும்அழைக்கப்படுகின்றது திருவண்ணாமலையில் பெரும் சோதியாய்த் தோன்றிய பரம்பொருளின் அடி முடி தேடி அலைந்த விஷ்ணுவும் பிரயாவும் கர்வம் நீங்கி—

''சுவாமி! தேவரீருடைய சோதிப்பெருவடிவை மீண்டும் கண்டு வழிபட அருளல் வேண்டும்'' என்று இறைஞ்ச ''கார்த்திகைத் திங்களில் வரும் திருக்கார்த்திகைநட்சத்திரத் தினத்தன்றுதீபத்திருநாளில்மீண்டும் எம் வடிவைக் காணுதி'' என சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளினார் என்பது வரலாறு.

### திருக்கார்த்திகைத் திருநாள்

முப்புரம் எரிசெய்த அச்சிவன் சிந்திய புன்னகையின் தீச்சுடரே திருக்கார்த்திகை என்பதும் வழக்கிலுண்டு. நயனம் மூன்றுறை நாதனின் நுதல் விழியில் இருந்து சிந்தி கனலினால் சரவணப் பொய்கைப் புனலில் குழவியாய்உருவாகிய கந்தன் கார்த்திகை மாதரால் கட்டி அணைக்கப் பெற்று கார்த்திகேயன் எனப் பெயர் விளங்கியதும் புராண வாயிலாக அறியக் கிடக்கின்றது இத்திருநாளில் தீபமேற்றி இறைவனைக் காணலாம் இறையன்பைப் பெறலாம் என்பதும் புலனாகின்றது.

### திருவண்ணாமலை தீபதரிசனம்

திருவண்ணாமலையானது சிவன் சோதியாய் தோன்றிய

**கந்த. தியாகராசா**

சிறப்போடு முருகன் அருணகிரிக்கு அறியாமையை நீக்கி அருளூட்டிய திருத்தலம் என்ற பெருமையையும் பெறுகின்றது. திருக்கார்த்திகைத் தினத்தன்று திருவண்ணாமலையின் உச்சியில் பெரும் தீபங்களை ஏற்றுவர். எரியும் இத் தீபச்சுடர் பலதிசைகளிலும் உள்ள ஊர்களுக்கு பிரகாசமாகத் தெரியும் மலை விளக்கு என்றும் குன்றின் மேலிட்ட தீபம் என்றும் இதனை அழைப்பர் இதனை அனைவரும் அண்ணாந்து [illegible] [illegible]டின் பெருமையை, வழிபாட்டால் கிடைக்கும் பயனை ''அறுமீன் சேரும் அகல் இருநடுநான் மறுகு விளக்குறுத்து மாலை தூக்கி'' என வழிகாட்டுகின்றது. கார்த்திகைத் திங்களின் போது குன்றின் மேலிட்ட தீபத்தின் மகிமையை ''குன்றின் கார்த்திகை விளக்கிட்டன...'' என விளித்து சீவக சிந்தாமணி கூட செப்புவதைக் காணலாம்.

### சொக்கப்பானை

ஆலயங்களில் இத் திருநாளில் சொக்கப்பானை எரித்து வழிபடுதலைக்காண்கிறோம். சுட்கப்பானை என்பதன் திரிபாடே ஈற்றில் சொக்கப்பானையானது. சுட்கம் என்பது வரட்சி எனப் பொருள் படும்.

உலர்ந்த தென்னை, பனை, கமுகு, வாழை என்பனவற்றைச் சுற்றி விமானம் போல காய்ந்த தென்னை, பனை, கமுகு ஓலைகளைக் கொண்டு கட்டுவர். உள்ளே ஒரு குற்றியில் தேனும் தினைமாவும் கொண்டு மாவிளக்குச்செய்து நெய்யூற்றித் தீபமேற்றுவர்.

சுவாலை விட்டெரியும் தீக்கொழுந்து புறத்தே மூடியிருக்கும் பேர் இருளை நீக்கி ஒளியேற்றுகிறது. இத்தீப ஒளியானது அக இருளைக் களைந்து ஆன்மாக்களுக்கு ஞான ஒளியைத் தரவல்லது

அனைத்து சைவ ஆலயங்களிலும் இத்திருநாள் சர்வாலய தீபமாகக் கொண்டாடப்படுகிறது. முருகன் ஆலயங்களில் மூன்று, ஐந்து, ஏழு என்ற எண்ணிக்கையில் தேனும் தினைமாவும் கொண்டு மாவிளக்குச் செய்து நெய்யூற்றித் தீபமேற்றி வழிபடுவர்.

தேங்காய்எண்ணெய்,இலுப்பெண்ணெய் கொண்டு சுடரேற்றி, வீடுகள், கிணறுகள், வயல், தோட்டம், பட்டி

(8 ஆம் பக்கம் பார்க்க)

### உதயவாக்கு

அன்பு என்பது காவியத்தைப் போன்றது; அதை தாமாக நினைக்கும் போது செய்ய இயலாது,

காண்டேகர்

### நாளை

கார்த்திகை 7
செவ்வாய்க்கிழமை
திதி: பூரணை
பிற்பகல்: 1.43 வரை;
நட்சத்திரம்: கார்த்திகை
முன்னிரவு 7.19 வரை.
திருக்கார்த்திகை விரதம்
குமாராலய தீபம்
விஷ்ணுவாலய தீபம்
ராகுகாலம்: 10 41 —12 11
யமநேரம்: 3.11 — 4 41
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகரை அண்டிய தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம்தேக்கம்; குளங்கள் நிரம்பின

அரியாலை, நவ. 22

தற்போது பெய்துவரும் கடும் மழையினால் நகரை அண்டிய தாழ்ந்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் பெரும் சிரமப்படுவதை நேற்றுக்காண முடிந்தது.

கொழும்புத்துறை இலந்தைக்குளம், ஈச்சமோட்டையில் உள்ள மறவன்குளம் மக்கிக்குளம், பால்குளம் என்பன நிரம்பி வெள்ளம் மேவிப் பாய்வதால் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன்இப்பகுதியை அண்டி மக்கள் வசிக்கும் குடியிருப்புப்பகுதிக்குள்ளும் வெள்ளம் புகும் நிலை ஏற்பட்டிருந்தது.

குடாநாட்டின் வேறு சில இடங்களிலும் குளங்கள் நிரம்பி உள்ளன. தாழ்ந்த நிலங்களும், வயல் பிரதேசங்களும் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. தற்போதைய அடை மழை அடுத்த சில தினங்கள் தொடருமாயின் வெள்ளப் பாதிப்புக்கள் ஏற்படும் சாத்தியம் உள்ளது. (ஐ·17)

## பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டோரின் விவரம்

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 18 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு-:

சாவகச்சேரி

(064110 ஏ). (118602 ஏ), (118602 பி), (118621 ஏ), (118623 ஏ), (118623 பி), (118623 சி), (126117 ஏ), (126129 ஏ), (126131 ஏ), (126131 பி), (126178ஏ), (126225 ஏ), (126249 ஏ), (126256 ஏ), (126256 பி), (126257 ஏ), (126257 பி), (126257 சி), (126257 டி), (126013 ஏ), (126013பி), (126026 ஏ), (126026 பி), (126044 ஏ), (126044 பி), (126049 ஏ), (126049 பி),

யாழ்ப்பாணம்

(120385 ஏ), (120641 ஏ), (120641 பி), (120641 சி), (124697 ஏ), (124796 ஏ, (124801 ஏ), (124801 பி) (124801 சி), (124801டி), (124801ஈ), (124850ஏ), (124862ஏ), (124862பி). (124869ஏ), (124908ஏ), (124926ஏ), (124926பி) (124929ஏ), (124929பி), (124929சி), (124929டி), (124929ஈ), (124931ஏ), (124931பி), (124931சி), (126516ஏ), (126516பி), (126516சி). (126536ஏ). (126536பி). (126536சி), (126539ஏ), (126542ஏ), (126560ஏ), (126579ஏ), (126609ஏ), (126646ஏ), (126646பி), (126646சி). (126646டி), (126655ஏ), (126657ஏ), (126657பி), (126771ஏ).

கரவெட்டி

(120140 ஏ), (120140 பி),

நல்லூர்

(124953 ஏ), (124953பி), (124953 சி) (126547 ஏ), (126631 ஏ), (126631 பி), (126631 சி), (126631 டி), (126735 ஏ), (126735 பி), (126735 சி).

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 19 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேசசெயலக ரீதியாக வருமாறு,

சங்கானை

(119460 ஏ), (125057பி), (125156 ஏ), (125156 பி). (125229 ஏ).

சாவகச்சேரி

(126292 ஏ).

கரவெட்டி

(125917 ஏ).

நல்லூர்

(125296 ஏ). (125297 ஏ).

பருத்தித்துறை

(120242 ஏ). (132534ஏ).

சண்டிலிப்பாய்

(108658 ஏ), (125050 ஏ). 125050 பி), (125050 சி), 125050 டி), (125054 ஏ). (125054பி), (125105ஏ), (125105பி). (125194ஏ).

தெல்லிப்பழை

(125064ஏ), (125197ஏ), (125198ஏ), (1259279ஏ), (1259279பி), (1259279சி), (1259279டி).

உடுவில்

(119451ஏ), (125024ஏ), (125036ஏ), (125036பி), (125057ஏ), (125068ஏ), (125147பி), (125164ஏ), (125268ஏ), (125424ஏ), (125459ஏ), (125459பி). (125147ஏ).

## கலை விழா

தென்மராட்சி, நவ. 22

சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கலை விழா கடந்த வியாழனன்று கல்லூரி கலை அரங்கில் அதிபர் செல்வி கி. வீரசிங்கம் தலைமையில் நடைபெற்றது

விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிப் பணிப்பாளர் இ. கணேசன் கலந்துகொண்டார். (ஐ-117)

## கட்டாக்காலி கால்நடைகள் தொல்லை

சண்டிலிப்பாய், நவ. 22

பண்டத்தரிப்பு, வடலியடைப்பு பாரத்தனை பகுதியிலுள்ள காணிகளில் நெற்பயிர்களைக் கட்டாக்காலி மாடுகள் அழித்து வருவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கட்டாக்காலி மாடுகளைப் பிடிப்பதற்கு விவசாய சம்மேளனம் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும் இவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ·135)

## திருவிளக்கேற்றி..

(7 ஆம் பக்கத் தொடர்)

போன்ற இடங்களில் விளக்கேற்றி வழிபடுவது இந்துக்களின் வழக்கமாகும்.

**இருள் அகல ஒளி பிறக்கும்**

நமிநந்திஅடிகள், கலியநாயனார், கணம்புல்லநாயனார் ஆகியோர் திருவிளக்குத் தொண்டு செய்து முத்தி அடைந்தனர். இவர்கள் வழியிற் பலர்தீபமேற்றிஇறைவழிபாடு செய்வதைக் காணலாம்.

இந்தத் தீப வழிபாடானது எவர்க்கும் எளிதானது. சோதிவடிவில் இறைவனைக் காண்பதும் சுலபமே. தீபம் எரியும்போது சூழவுள்ள இடமெல்லாம் ஒளியேற்றப் படுவது போல எம் உள்ளே உள்ள ஆணவம் என்ற தீய இருளும் போயகலும் உள்ள மும்தூய்மைபெறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை! ★


## கண்ணீர் அஞ்சலி

எமது சக பணியாளர்
தோழர் திரு. க. கணேசலிங்கம்
(வாகன சாரதி)
அவர்களின் அன்புத் தந்தையார்

**குழந்தையர் கந்தப்பிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கக்கிளை,
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்.

(71149)

## கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின்
வல்லிபுரக் குறிச்சி கிராம சேவகரான
திரு. நாராயணபிள்ளை குமரகுருநாதன்
அவர்களின் அன்புத் தாயாரான
18—11—99 இல் மரணமடைந்த

**திருமதி நா. சின்னத்தங்கம்**

அவர்களுக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாயங்களையும் தெரிவிக்கின்றோம். அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்.
வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.

(சி/ 9933)

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 — 11 — 1936

மறைவு 04 — 12 — 1987

அமரர் **இராசதுரை பஞ்சாட்சரம்**
(ஸ்தாபகர் அருள்முருகன் ஜுவலறி யாழ்ப்பாணம்)

திதி: 22 - 11 - 1999

உழைப்பின் சிறப்பறிந்து உண்மை உயர்வறிந்து
களைப்பாறிய கர்வமில்லா கண்ணியமே
எங்கள் மனங்களில் என்றென்றும் வாழ்வாய்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சாரங்கா நகைமாடம்,
177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/9932)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக

## மங்கள கரமான திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் பிரமாதி வருஷம் கார்த்திகை மாதம்
06 - 11 - 99 (22 - 11 - 99) திங்கட்கிழமை
பகல் 12.10 மணி முதல் 1.10 மணி வரை
உள்ள சுபவேளையில்

சந்நிதி வீதி, அச்சுவேலியில்

**கவிதா**
**நகை மாடம்**

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பிக்க உள்ளோம்.

தங்க நகைகள் உலகில் பன்னெடுங்காலம் அனுபவம் மிக்கவர்களின் கைவண்ணத்தில் அசல் 22 கரட் நகைகளை ஓடர் கொடுத்தும் உடனுக்குடனும் பெற்றுக் கொள்ளலாம்.

உரிமையாளர்,
ந. சக்திவேல்

சந்நிதி வீதி,
அச்சுவேலி.

(71146)

சமாதானம், சாந்தி, சுகவாழ்வு பெற புத்தாயிரம்
ஆண்டை வரவேற்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்

## கோபாலா சர்வதேச தொடர்புச் சேவை

## GOPALAA INTERNATIONAL TELE COMMUNICATION

உள்நாட்டு இல.
021 - 2153 - 3277
070 - 212372
070 - 212693
Fax 070 - 212372

வெளிநாட்டு இல.
0094 - 212153 - 3277
0094 - 70 - 212372
0094 - 70 - 212693
Fax 070 - 212693

உள்ளூர்க் கட்டணம் நிமிடத்திற்கு ஆறு (6/-) ரூபா
வெளியூர்க் கட்டணம் நூறு (100/-) ரூபா

உள்வரும் அழைப்புக்கள் யாவுக்கும் நிமிடத்திற்கு மூன்று (3/-) ரூபா மட்டும்.
அறிவிப்புத் தகவல் அழைப்பு இலவசம்.
தங்குமிட வசதி இலவசமாகச் செய்து கொடுக்கப்படும்.

சாவகச்சேரி வீதி, மந்திகை, புலோலி.
(சந்தை முன்பாக)

(சி/ 9934)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரதீர நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ 22

வை. எம். சி. ஏ வாலிபர் சழகம் யாழ் நகரில் உள்ள முன்னணிக் கழகங்களுடன் இணைந்து வழங்கும் 'வீர வித்தைகளின் சங்கமம் 'யோ—சரா ஜிம்' நிகழ்ச்சி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் ஜிம்னாஸ்ரிக், மற்றும் கராத்தே, யோகாசனம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. [க]

## சாயிபாபா பிறந்தநாள் விழா

மானிப்பாய், நவ. 22

மானிப்பாய் சத்யசாயி சேவா நிலையத்தில் பகவான் ஸ்ரீ. சத்யசாயி பாபாவின் பிறந்த தின விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு நிலையத் தலைவர் சட்டத்தரணி இரா. வசந்தகேனன் தலைமையில் நடைபெறும்.

விழாவில் மல்லாகம் பதில் நீதிபதி மு. திருநாவுக்கரசு 'தெய்வீக வாழ்வு' எனும் பொருள் பற்றி சிறப்புரை நிகழ்த்துவார்.

இந்த நிகழ்வில் பிரசாந்தி நிலையக் கொடியேற்றல், பஜனை, திருவூஞ்சல், கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெறவுள்ளன. (க-90)

★ ★ ★

ஊரெழு ஸ்ரீ சத்யசாயி மண்டலியில் பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் பிறந்த நாள் விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வில் மல்லாகம் பதில் நீதிபதி மு. திருநாவுக்கரசு மற்றும் மல்லாகம் மாவட்ட பதில் நீதிவான் அரியநாயகம் ஆகியோரது சிறப்புச் சொற்பொழிவுகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (க)

★ ★ ★

ஆனைக்கோட்டை ஆறுகால மடத்தடியில் அமைந்திருக்கும் ஸ்ரீசத்தியசாயி பகவான் இல்லத்தில் இன்று திங்கட்கிழமை என். நவரத்தினம் தலைமையில் சாயி பஜனை—கூட்டுப்பிரார்த்தனை நடைபெறும்.

நண்பகல் 12 00 மணிக்கு அன்னதானம் இடம்பெறும். (க-30)

# கைதாவோரை யாழ்.நீதிமன்றங்களில் ஆஜர்செய்ய ஏற்பாடுசெய்யவேண்டும்

## காணாமற்போனோர் சங்கக் கூட்டத்தில் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 22

குடாநாட்டில் கைது செய்யப்படுபவர்களை யாழ்ப்பாண நீதிமன்றங்களிலேயே ஆஜர் செய்ய சட்டமாஅதிபர் பிறப்பித்துள்ள உத்தரவை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நல்லெண்ணத்துக்கும் சமாதானத்துக்குமான அமைப்பைச் சேர்ந்த சு. பரமநாதன் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கத்தின் கூட்டம் நேற்று நடந்த சமயம் அதில் பேசுகையிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

சட்டமா அதிபரின் பணிப்புரை அடங்கிய கடிதம் மல்லாகம் — பருத்தித்துறை நீதிவான் ஆர். ரி. விக்னராஜாவிடம் உள்ளது என்றும்—

அந்தக் கடிதத்தின் பிரதியைப் பெற்று பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் மனித உரிமை ஆணைக்குழுவினருக்கு வழங்கி அந்த உத்தரவை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் — அவர் கோரிக்கை விடுத்தார். [இ-3-9]

## இன்று முழுநிலா இசை அரங்கு

தென்மராட்சி, நவ 22

சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் தென்மராட்சி இசை ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்தும் முழுநிலா இசையரங்கு இன்று சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இந்த இசையரங்கில் வலிகாமம் கல்விவலய இளைப்பாறிய உதவிக் கல்விப்பணிப்பாளர், சங்கீதமணி சு. கணபதிப்பிள்ளையின் இசைக் கச்சேரி இடம் பெறும். (இ 8 117)

## தேர்தல் வன்செயல்கள் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 22

கொழும்பில் நேற்று வரை 54 தேர்தல் வன்செயல்கள் இடம்பெற்றுள்ளன என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஐ.தே.க ஆதரவாளர்களே கூடுதலாகத் தேர்தல் வன்செயல்களில் ஈடுபட்டுவருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## உயிரிழந்த மாணவருக்காக விசேட வழிபாடு

யாழ்ப்பாணம், நவ. 22

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்களின் அகாலமரணத்தை ஒட்டி பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் ஏற்பாடு செய்துள்ள விசேட வழிபாடு இன்று காலை 11 மணிக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெறும். [ஐ-க]

## கலந்துரையாடல்

சுன்னாகம், நவ. 22

சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 9 30 மணிக்கு பலாலி ஆசிரிய கலாசாலையில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக பதிவாளர் கலாநிதி க. குணராசா தலைமையில் நடைபெறும் 'பிரபஞ்சத்தின் புதிய புரிதல்கள்' என்றதலைப்பிலான இக் கலந்துரையாடலில் கவிஞன் கலாநிதி இ. முருகையன் தொடக்கவுரை ஆற்றுவார். (ஐ-27)

## ரெலிக்கொம் ஊழியருக்கு சீருடை

அரியாலை, நவ 22

யாழ். ரெலிக்கொம் நிறுவன ஊழியர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

சீருடை அணிந்தே ஊழியர்கள் தற்போது கடமைக்குச் செல்கின்றனர்.

அத்துடன் காலணிகளும் வழங்கப்பட்டுள்ளன (ஐ-17)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, நவ 22

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் தொண்டமனாறு ஸ்ரீசெல்வச் சந்நிதி முருகன் ஆலயச் சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இன்று காலை 7.30 மணி தொடக்கம் மாலை 5 30 மணி வரை ஆச்சிரம சுவாமி செ. மோகனதாஸ் தலைமையில் ''திருவாசகம் முற்றோதல்'' நடைபெறும். (க-30)

★ ★ ★

கொழும்புத்துறை, நவ. 22

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்தேரடியில் உள்ள அறுபத்துமூவர் குருபூசை மடத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பூரணைதின பஜனை—கூட்டுப்பிரார்த்தனை, வழிபாடுகள் இடம்பெறும்.

நண்பகல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (க-30)

★ ★ ★

புன்னாலைக்கட்டுவன், நவ. 22

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவைசித்திவிநாயகர் ஆலயத்தில் இன்று மாலை 3.00 மணிக்கு கார்த்திகைத் தீப விசேட அபிஷேகமும் வழிபாடும் இடம்பெறும்.

அன்றைய தினம் ஐம்பொன்னால் செய்யப்பட்ட பஞ்சமுகப் பிள்ளையார் வீதியுலா வருவார். (க-133)

★ ★ ★

யாழ்ப்பாண , நவ. 22

மாவை கொல்லங்கலட்டிப் பிள்ளையார் ஆலயத்தில் சர்வாலய தீப உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறும், [க]

★ ★ ★

கொழும்புத்துறை, நவ. 22

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் குருமூர்த்த ஆலயத்தில் தினசரி பிற்பகல் 3 மணி தொடக்கம் திருவிளையாடல் புராணப்படிப்பு நடைபெற்றுவருகிறது [க-30]

## தபாலகம் இடம் மாற்றம்

இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து இதாவிலில் இயங்கி வந்த இயக்கச்சி உப தபால் நிலையம் கடந்த முதலாம் திகதி முதல் மாசாரில் உள்ள தனியார் வீடொன்றில் இயங்கி வருகிறது.

இயக்கச்சிப் பகுதியைச் சேர்ந்த சில கிராமங்களில் மக்கள் குடியேறி வருவதால் உப தபால் நிலையமும் இடம் மாற்றப்பட்டு இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

# தனியார் கல்வி நிலையங்களிலும் இணைப்பாடத்திட்ட நிகழ்வு தேவை

## தென்மராட்சிக் கல்விப் பணிப்பாளர் வலியுறுத்து

பாடசாலைகளில் மட்டுந்தான் இணைப்பாடத்திட்ட நிகழ்வுகளான கலைவிழா, பரிசளிப்பு விழா, தமிழ்த் தினம், ஆங்கில தினம், விளையாட்டுப் போட்டிகள் என்பன நடைமுறைப் படுத்தப் படுகின்றன. தனியார்கல்வி நிறுவனங்களில் இத்தகைய இணைப்பாடத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுவதில்லை. அவை இயந்திரமயமான, பரீட்சைக்கு மாணவரைத் தயார் செய்யும் மையங்களாகவே செயற்படுகின்றன. தனியார் கல்வி நிலையங்களிலும் இணைப் பாடத் திட்ட நிகழ்வுகள் தேவை.

கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தின் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பரிசில் நாள் விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் மு. வ. செல்வராசா இவ்வாறு கூறினார்.

அதிபர் வே. பாலசுப்பிரமணியம் தலைமை வகித்து பரிசில் நாள் உரையை நிகழ்த்தினார்.

முதன்மை விருந்தினர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

கடந்த 90 ஆண்டுகளாகச் சிறந்த கல்விப் பணியாற்றி வரும் இவ்வித்தியாலயம் கிராமப் புறத்தில் அமைந்திருந்தாலும் 21 ஆம் நூற்றாண்டுக்கு மாணவர் முகங் கொடுக்கக் கூடிய கல்வித் திட்டங்களை அமுல் செய்துவருவது மகிழ்ச்சிக்குரியது.

பரீட்சை மதிப்பீடுகளை மட்டும் கொண்டு மாணவரை அளவிட முடியாது. சகல துறைகளிலும் மாணவரின் திறமைகளை மதிப்பீட்டு அவ்வத்துறையில் அவர்களை வளர்த்தெடுக்க வேண்டும்.

நகரப்புறப் பாடசாலைகளுடன் போட்டி போட்டுப் பல சாதனைகளை இப்பாடசாலை படைத்துள்ளது எல்லோரும் எல்லாம் அறிந்தவருமில்லை, ஏதும் அறியாதவர்களும் எவருமில்லை என்பதுவே உண்மை.

21 ஆம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்க இன்னும் நாற்பத்திஇரண்டு நாட்கள் இருக்கின்றன, இவ்வேளையில் புத்தாயிரமாம் ஆண்டிற்கு முகம் கொடுக்கும் வகையில் மாணவர்கள் தம்மைத் தயார்ப்படுத்த வேண்டும் என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கவிஞர் சோ. பத்மநாதன் உரையாற்றுகையில் —

பாடசாலைகள் மக்களுடைய சொத்தாகும் பிள்ளைகளுடைய அபிலாசைகளை நிறைவேற்றுவதே பாடசாலைகளின் கடமையாகும். இதில் பெற்றோருடைய பங்களிப்பே மிக முக்கியமானது.

தேசியப் பாடசாலைகளில் மாணவர் வடிகட்டி எடுக்கப் படுகிறார்கள். அவர்களைத் தூக்கிவிடத் தேவையில்லை. எஞ்சியுள்ள இத்தகைய கிராமப பாடசாலைகளில் உள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களின் திறமைகளை விருத்தி செய்யும் இந்தப் பாடசாலை ஆசிரியர்களைப் பாராட்ட வேண்டும் — என்றார்

இறுதியில் முதன்மை விருந்தினரும் சிறப்பு விருந்தினரும் பரிசில்களை வழங்கினர்.

[illegible] கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன (ஐ-74-133)

## கண்ணீர் அஞ்சலி

20 — 11 — 99 அன்று மன்னார்
தட்சனாமருதமடுவைச் சேர்ந்தவரும்
பலாலி ஆசிரிய கலாசாலை
வர்த்தகப் பிரிவு 2 ஆம் வருட மாணவனுமாகிய

**பாலச்சந்திரனின்**

அன்புத் தந்தை, தங்கை
மற்றும்
உறவினர்கள்

கடந்த 20-11-99 இல் மடுவில் அகால மரணமடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நண்பர்கள்

வளாக வீதி,
திருநெல்வேலி.

(சி/9937)

## மரண அறிவித்தல்

### திருமதி ஆனந்தராசா ராசமதி

திருமதி ஆனந்தராசா ராசமதி (ஆசிரியை, யாழ். புனித மரியாள் மகளிர் வித்தியாலயம், ஊர்காவற்றுறை) அவர்கள் நேற்று (21-11 99) காலமாகிவிட்டார்.

அன்னார் ஆனந்தராசா (ஊர்காவற்றுறை பல நோ. கூ. சங்கக் கிளை முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் அயந்தா, ஐதுவரன், கரிகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஐத்தாம்புலம் சோமசுந்தரம் (ஐயாத்துரை) - செல்வதேவி தம்பதிகளின் அன்பு மகளும் பருத்தியடைப்பு நடராசா - அருந்ததி தம்பதிகளின் அன்பு மருமகளும் அஞ்சலாதேவி, ஜெயந்தி, கண்ணதாசன், சுகந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயராசா (ஜெயபுரம்), பிறேமராசா (ஜேர்மனி), புஷ்பராசா (யாழ்ப்பாணம்), மதனராசா (தலைவர், ஊர்காவற்றுறை பிரதேச சபை), நவனீதராசா (ஜேர்மனி), கலா (லண்டன்) கலைமதி (திருகோணமலை), புஷ்பதேவி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 22-11-99 மாலை 2 மணிக்கு நடைபெற்று கரம்பொன் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
ந. மதனராசா
(தலைவர், ஊர்காவற்றுறை பிரதேசசபை)

பாலக்காட்டுச் சந்தி,
கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.

(சி/9935)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமாரிடம் சட்ட உதவி கோருகிறார் ராஜபக்ஷ!

கொழும்பு, நவ. 22

கைதடி மாணவி கிருஷாந்தி கொலை வழக்கு முதலாவது எதிரியான முன்னாள் சிப்பாயான சோமரத்ன ராஜபக்ஷ பிரபல சட்டத்தரணி குமார் பொன்னம்பலத்தின் சட்ட உதவி கோரியுள்ளார்.

செம்மணியில் புதைகுழிகள் இருக்கும் இடங்களை அடையாளம் காட்டுவதற்காக ராஜபக்ஷ அழைத்து வரப்பட்ட சமயம், அவர் நீதிவானிடம் சட்ட உதவி பெற அனுமதிக்குமாறு கோரியிருந்தார்.

அதற்கு நீதிவான் அனுமதியும் வழங்கியிருந்தார்.

தற்சமயம் இரகசியப் பொலீஸாரால் அவர் விசாரிக்கப்பட்டு வருகின்றார்.

இந்த நிலையில் அவர் தமக்கு சட்ட உதவி வழங்குமாறு குமார் பொன்னம்பலத்திடம் கோரியுள்ளார்.

அதற்கு அவர் இசைந்துள்ளார் எனக் கூறப்பட்டது.

(இ-3-150)

## புனிதத்...

(முதலாம் பக்கத் தொடர்)

மடுத் தேவாலயத்தின் நான்கு பக்கமும் உள்ள எல்லைக்குள் உள்ள பிரதேசத்தை இராணுவ மற்றும் அரசியல் இலாபத்துக்காக எவரும் பயன்படுத்தக் கூடாது.

புனிதத் தன்மையைப் பேணவேண்டிய அந்த ஆலயத்தில் யாத்திரிகர்கள் சுதந்திரமாக வந்து செல்ல வசதியாக இருதரப்பும் முழுமையாக அங்கிருந்து வெளியேறவேண்டும் — இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொடூரமான முறையில் நடந்த இந்தச் சம்பவத்தைக் கண்டித்துள்ள மன்னார் ஆயர் இறந்தவர்களின் குடும்பங்களுக்குத் தமது ஆறுதலையும் தெரிவித்துள்ளார்.

(இ-3)


புத்தாயிரமாம் ஆண்டின் இறுதியில்......

**Y. M. C. A. வாலிபர் கழகமானது**

தனது கழக அபிவிருத்திக்காகவும் தொடர்ந்து பல செயற் திட்டங்களை முன்னெடுப்பதற்காகவும் யாழ். நகரிலுள்ள முன்னணிக்கழகங்களுடன் இணைந்து வழங்கும்

இதுவரை எவருமே பார்த்திராத மாபெரும் காட்சி!

**வீர வித்தைகளின் சங்கமம்**

**யோ - கரா - ஜிம்**

1. ஜிம்னாஸ்ரிக் உடற் பயிற்சி 2. கராத்தே
3. யோகாசனம்

இவை மூன்றும் ஒரு பொது ஒழுங்கு முறையில் ஒன்றிணைகின்றன.

நிகழ்வுகள் வருமாறு:-

1. ஜிம்னாஸ்ரிக் நிகழ்ச்சி:
வியக்கவைக்கும் உடற் சமநிலைகள்

2. கராத்தே நிகழ்ச்சி:
பல புதிய தற்காப்பு நுணுக்கங்கள்

3. யோகாசன நிகழ்ச்சி:
மனித உடலுக்கு அத்தியாவசியமான முக்கிய ஆசனங்கள்

நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கும் கழகங்கள்:-

★ ஜிம்னாஸ்ரிக் காட்சி:-
யாழ். மாவட்ட ஜிம்னாஸ்ரிக் கழகம்

★ கராட்டி காட்சி:-
அக்கடமி ஒவ் ஒறியன்ரல் மார்சியல் ஆட்ஸ்

★ யோகாசனம்:-
ஓல் சிலோன் யோகாசனா ஒகனைசேஷன்

நிகழ்ச்சிகள் நடைபெறும் இடம்:

**இளங் கலைஞர் மன்றக் கலாமண்டபம்**
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்:-
**22-11-1999** திங்கட்கிழமை
பிற்பகல் 2-30 மணி (புதிய நேரம்)

அன்பளிப்புகள்:-
ரூ 500/- ரூ. 100/- ரூ 50/- ரூ. 20/-

★ ரிக்கற்றுக்கள் எங்கும் பரபரப்பாக விற்பனையாகின்றன.

மண்டப வாயிலிலும் பெற்றுக்கொள்ளலாம்.

அனைவரும் வருக! ஆதரவு தருக!!

**வை. எம். சி. ஏ. வாலிபர் கழகம்**

விளம்பர அனுசரணை:-

**மொடேண் மெடிக்கல்ஸ் & கொமினிகேசன்**

கண்டி வீதி. சுண்டிக்குளி. யாழ்ப்பாணம்.

T. P - 021 - 2472, 021 - 3078 பக்ஸ் (2472)

(சி/9928)


# ஸிம்பாப்வேக்கு 136 ஓட்டங்கள்

ஹராரே, நவ. 22

இலங்கை — ஸிம்பாப்வே அணிகளுக்கு இடையில் ஸிம்பாப்வேயில் நடைபெறும் முதலாவது டெஸ்ட் போட்டியில் நான்காவது நாளான நேற்று ஆட்ட நேர இறுதியில் ஸிம்பாப்வே அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

முன்னதாக இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் 428 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் மாவன் அத்தப்பத்து இரட்டைச் சதம் அடித்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸிம்பாப்வே அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 136 ஓட்டங்களைப் பெற்று 3 விக்கெட்டுக்களை இழந்திருந்தது. இதில் க்றான்ப்ளவர் 48 ஓட்டங்களையும், நீல் ஜோன்ஸன் ஆட்டமிழக்காது 52 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சமிந்த வாஸ் 2 விக்கெட்டுக்களையும் முத்தையா முரளிதரன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இறுதி நாள் ஆட்டம் இன்று இடம்பெறும்.

(இ-8-4)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்)

அங்கு வந்த பொது மக்கள் அவற்றைப் பார்த்துச் சென்றனர் எனவும்—

காயமடைந்தவர்களுக்கு உடனடியாக இரத்தம்தேவை என்றவுடன் பொதுமக்களும் தமிழ் அமைப்புகளின் உறுப்பினர்களும் தாமாக முன்வந்து இரத்ததானம் செய்தனர்எனவும் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை மேற்படி தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த நிலையில் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

கோகுலசாரதி (வயது 59), ராதாகிருஷ்ணன்(வயது 36), இன்பநீதன் (வயது 6), ஸ்ரீ பாஸ்கரன் (வயது 29), மல்லிகாதேவி (வயது 34), கஜன் (வயது 3), ஸ்ரீ பாலசுந்தரம் (வயது 50), குமுதினி (வயது 13).

சிவமலர் (வயது 28), சுதாந்தன் (வயது 13), தயாநிதி (வயது 10), சறோஜினி (வயது 32).

என்.உதயசுதா(வயது 18), சிவபாலன் (வயது 30), உதயலட்சுமி (வயது 17), செல்லத்துரை சிவராஜா (வயது 38), ராஜம்மா (வயது 52), கமலசிங்கம் (வயது 36), விஜயேந்திரன் (2 மாதக்குழந்தை), எஸ். பாலரதன் (வயது 28), கே. குமரன் (வயது 17), முத்துப்பிள்ளை (வயது 41), ஏகாம்பரம் சின்னராஜா (வயது 24), சிவசக்தி (வயது 29), சந்திரிகா (4 மாதக்குழதை), குமரன் (வயது 9)

ரவி (வயது 27), ஈஸ்வரி [வயது 12], தங்கராஜா நரேந்திரன் [வயது 22], தேவலட்சுமி [வயது 52], இரத்தினம் நவரட்ணராஜா [வயது 44], உதயதேவி [வயது 23], கேதீஸ்வரன் (வயது 22).

சூரியகுமார் (வயது 22), பவித்தா (வயது 9), அம்பிகா [வயது 36], சந்திரகாந்தன் [வயது 10], விஸ்னுமன் [வயது 8], றஞ்சினி [வயது 36].

இந்திராணி (வயது 17), சத்தியவேணி (வயது 12), மயூரன் (வயது10), சஜந்தினி (வயது5), மோகன் (வயது9), கந்தசாமி (வயது 51), டன்ஸ்ரன் (வயது 6). [இ-7]

## பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

அந்தத் திகதிகளில் டிக்கெட் பெற்ற எஞ்சியோர் இன்று அனுப்பப்படுவர் என்றும் — யாழ் சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

தற்சமயம் இரு விமானச் சேவைகள் இடம்பெறுகின்றன என்றும்—

சில சமயம் இன்று மூன்று சேவைகள் இடம்பெறக்கூடும் என்றும் — சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-3)


**வீடியோ CD வெளியீடுகள்!**

▶ ஹரிஹரனின் இசை நிகழ்ச்சி (CD)
▶ பிரஷாந் நைற் (CD)
▶ மணிவண்ணன் வடிவேல் கலந்துகொள்ளும் இசை நிகழ்ச்சி (CD)
▶ முதல்வன்
▶ விஜயகாந் - சிம்ரன் நடித்த கண்ணுபடப்போகுதய்யா

**விஷ்ணு வீடியோ**
K.K.S றோட், கோண்டாவில்.
(7117)


# முடிவு திகதி

யாழ்ப்பாணம், நவ. 22

வட இலங்கை சங்கீத சபை பரீட்சைகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 26 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-9-19)

## மருக்...

(முதலாம் பக்கத் தொடர்)

கும். இறந்த அப்பாவி மக்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம்.

ஆலயத்தில் தஞ்சமடைந்தவர்களின் அவசர தேவைகளை உடன் பூர்த்தி செய்யும்படி அரசபணியாளர்களையும் மற்றைய பொதுப்பணி நிலையங்களையும் அன்புடன் வேண்டுகிறோம் — என்றுள்ளது.

அமலமரித்தியாகிகள்

யாழ். அமலமரித்தியாகிகளும் பதில் முதல்வரும் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தஞ்சம் தேடி தேவாலயங்களில் அடைக்கலம் புகும் மக்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் சர்வதேச போர் நியமங்களுக்கு முரணான செயல் மட்டுமல்ல, மனிதாபிமானமற்ற செயலும் ஆகும்.

மடுத்திருப்பதி பல ஆண்டுகளாக போரின் தாக்கத்தினால் அபயம் தேடிய அனைத்து மக்களையும் ஆதரித்த திருத்தலம். இருப்பினும், 20 – 11 – 99 அன்று மடுப்பதியில் அன்னையின் நிழலில் பாதுகாப்புத் தேடி, கூடியிருந்த அப்பாவி அகதிகள் மேல் மேற்கொள்ளப்பட்ட கொடூரமான, கோழைத்தனமான தாக்குதலையிட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைவதோடு, இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இத்தாக்குதலில் சுமார் 35 அப்பாவிகள் அதே இடத்திலேயே கொல்லப்பட்டும் 50-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர்.

இப்படியான மனித வன்முறைத் தாக்குதல்கள் மேலும் தொடராமல் இருக்க மனித நேயம் கொண்ட சகலரும் குரல் கொடுக்க வேண்டியது தார்மீகக் கடமையும் பொறுப்பும் ஆகும்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட அனைவருக்காகவும் இறைவனின் இரக்கத்தை வேண்டுவதோடு, இவர்களின் உற்றார் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதேவேளையில், போரின் கொடிய அனர்த்தங்கள் நீங்கி சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டுகின்றோம். —என்றுள்ளது.

ஈ. பி. ஆர். எல். எவ்.

ஈ. பி. ஆர். எல். எவ். விடுத்த அறிக்கை வருமாறு;-

மடுவுக்கு அருகில் முப்பத்தைந்துக்கு மேற்பட்ட அப்பாவிகள் கொல்லப்பட்டுள்ளனர். ஐம்பதுக்கு மேற்பட்டோர் கடுங்காயங்களுக்கு இலக்காகி வவுனியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கண்மூடித்தனமான ஷெல் வீச்சுக்களே இந்த அப்பாவிகளின் உயிரிழப்புக்கு காரணமாகும். யாருடைய ஷெல் வீச்சில் இவர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதல்ல முக்கியம். அப்பாவிப் பொதுமக்கள் அநியாயமாகக் கொல்லப்படுகின்றார்கள் என்பதே முக்கியம். இந்த யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் அரசும் விடுதலைப் புலிகளும் இந்த இழப்புகளைப் பற்றிச் சிந்திக்கவேண்டும் என்பதே எமது கோரிக்கை.

நாடோடிகள் போன்று ஒன்றுக்கு பத்துத் தடவைகள் இடம்பெயர்ந்து அகதிகளாகி தமது உயிரைப் பாதுகாக்க அலைந்து திரியும் மக்களைக் கொன்று குவிப்பதென்பது அர்த்தமற்றதும் ஏற்றுக்கொள்ள முடியாததும் ஆகும்.

இறந்துபோனவர்களைத் திருப்பிக் கொடுக்க எவராலும் முடியாது. அதேபோல் இவர்களது குடும்பங்களைப் பராமரிக்கவும் எவராலும் முடியாது. எனவே குழந்தைகளை அநாதைகளாகவும் பெண்களை விதவைகளாகவும் ஆக்கிய பின் மன்னிப்புக் கேட்பதில் எந்த வித அர்த்தமும் இல்லை. இதற்குஒரே வழி நடந்துகொண்டிருக்கும் யுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதென்பதே.

மீண்டும் ஜனாதிபதியானால் இனப்பிரச்சினையைத் தீர்ப்போம் என வாக்குறுதிகளை அள்ளி வழங்குவோர் குறைந்தபட்சம் இந்த அப்பாவிகளின் கொலைகளையாவது நிறுத்தலாம் தானே!

இறந்துபோன பொதுமக்களின் துன்பத்தில் ஈ. பி. ஆர். எல். எவ். பங்கேற்பதுடன் அவர்களுக்குத் தமது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கின்றது.

— என்றுள்ளது. (இ-7)

# பாலம் சேதம்

கொக்குவில் பொற்பதி வீதியிலிருந்து ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயத்துக்குச் செல்லும் வீதியின் பாலம்உடைந்து வீழ்ந்த நிலையில் உள்ளது. இதன் விளைவாக பொற்பதி வீதியோர நீர் வடிந்தோடும் வாய்க்கால் நிரம்பி வீதியில் வெள்ளம் தேங்குகிறது.

இந்த வாய்க்காலினுள் பற்றைகள் புற்கள் அடர்ந்து வளர்ந்துள்ளன. இதன் விளைவாக அப்பகுதி வீட்டு வளவுகளினுள் வெள்ளம் தேங்கி நிற்கிறது. (ஐ-69)

# மரங்கள் நடுகை

காரைநகர் கிழக்கு 'இளந் தென்றல் இளைஞர் கழகத்தினால் காரைநகர் சுப்பிரமணியம் வீதியில் வேம்பு, இலுப்பை, தேக்கு போன்ற மரக்கன்றுகள் கடந்த வியாழக்கிழமை நடப்பட்டன.

இம்மர நடுகையின் ஆரம்ப நிகழ்விற்குக் காரைநகர் கிழக்கு கிராம அலுவலர் எஸ். கனகசபாபதி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நட்டார்.

## மடு ஆலயப்..

(முதலாம் பக்கத் தொடர்)

மயமாகக்காட்சி அளிக்கிறது. பெரும் பதற்றமும் நிலவி வருகிறது.

அதேசமயம் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் நேற்று விடுத்த அறிக்கையில் இந்தச் சம்பவத்துக்கு விடுதலைப்புலிகள் மீது குற்றஞ்சுமத்தி உள்ளது. (இ--க--.3-7)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.11.1999 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org